Registered as a News paper in Sri Lanka

விலை ரூபா: 8.00

# வலம்புரி
Valampurii

பக்கங்கள்:- பன்னிரண்டு

சங்கு 06 | வள்ளுவர் ஆண்டு 2036 | கார்த்திகை 06 | திங்கட்கிழமை (21.11.2005) | தொலைபேசி 222 3378, 222 7644 | ஒலி 337

ராம்கோ
RAMCO CEMENT
சீமெந்து

# மாவீரர் எழுச்சி வாரம் இன்று ஆரம்பம் தாயகப்பகுதி எங்கும் எழுச்சிக் கோலம்

(யாழ்ப்பாணம்)

தமிழ் மக்களின் விடிவுக்காக தம் உயிரைத்தியாகம் செய்த மாவீரர்களின் எழுச்சி வாரம் இன்று ஆரம்பமாகின்றது.

மாவீரர் நாளை அனுஷ்டிப்பதற்காக தமிழர் தாயகப்பகுதி எங்கும் எழுச்சிக் கோலம் பூண்டுள்ளது. இன்று ஆரம்பமாகும் எழுச்சி வாரம் எதிர்வரும் 27ஆம் திகதி நிறைவு பெறும். அன்று மாவீரர் துயிலும் இல்லங்களில் அஞ்சலி நிகழ்வுகள் நடைபெற்று மாவீரர்களின் கல்லறைகளுக்கு மலர் மாலை அணிவித்து தீபமேற்றும் நிகழ்வும் நடைபெறும்.

இதே வேளை இன்று தொடக்கம் எதிர்வரும் 27 ஆம் திகதி வரையிலான மாவீரர் எழுச்சி வாரத்தில் பல்வேறு நிகழ்வுகள் மேற்கொள்ளப்படவுள்ளன. ஒவ்வொரு பிரதேசத்திலும் உள்ள தேசிய எழுச்சிப் பேரவையினரின் ஏற்பாட்டில் இவை நடைபெறவுள்ளன. சிரமதானப்பணிகள், மாவீரர்களின் பெற்றோர் கௌரவிப்பு, இரத்ததானம் வழங்கல் போன்ற நிகழ்வுகள் நடாத்துவதற்கு யாழ்ப்பாணத்தில் ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

வீதிகள் தோறும் சிவப்பு, மஞ்சல் கொடிகளை க்கட்டியும் மாவீரர் நினைவு அலங்கார வளைவுகளை அமைத்தும் இந்நினைவு நாளை அனுஷ்டிக்குமாறு கோப்பாய் பிரதேச மாவீரர் நினைவு நாள் ஏற்பாட்டுக்குழு கேட்டுள்ளது.

பாடசாலைகள், பொது நிறுவனங்கள், கல்வி நிறுவனங்கள், அரச, அரசசார்பற்ற நிறுவனங்களில் மாவீரர் வாரத்தை அனுஷ்டிக்குமாறு கேட்கப்பட்டுள்ளது.

இந்நினைவு வாரத்தில் மாவீரர் திலகங்களின் புனித பெற்றோர்களை கௌரவிக்கும் நிகழ்வுகளை முன்னெடுக்குமாறும் கோப்பாய் பிரதேச ஏற்பாட்டுக்குழுவினரால் கேட்கப்பட்டுள்ளது. (ச)

## செல்காஸின் விலை அதிகரிப்பு

(கொழும்பு)

சமையல் எரிவாயுவின் (செல்காஸ்) விலை இன்று நள்ளிரவு முதல் 57 ரூபாவினால் அதிகரிக்கவுள்ளதாக செல்காஸ் நிறுவனம் தெரிவித்துள்ளது. இவ்விலை அதிகரிப்பின்படி கொழும்பு நகரத்திற்கு உட்பட்ட பிரதே சங்களில் 12.5 கிலோகிராம் எரிவாயு சிலிண்டரின் விலை 850 ரூபாவாக அதிகரிக்கப்பட்டுள்ளது. வெளி இடங்களுக்கான செல்காஸ் விலை பின்னர் அறிவிக்கப்படும் என்றும் அந்நிறுவனம் தெரிவித்துள்ளது.

உல சந்தையில் செல்காஸின் விலை அதிகரிப்பினால்தான் இலங்கையிலும் செல்காஸின் விலை அதிகரிக்க வேண்டி ஏற்பட்டதாக நிறுவனம் தெரிவித்துள்ளது.

உலக சந்தையில் ஒரு தொன் காஸின் விலை 593.2 அமெரிக்க டொலர்களாக அதிகரிக்கப்பட்டுள்ளதாக அந்நிறுவனம் மேலும் தெரிவித்துள்ளது. (ச-8)

# புதிய பிரதமராக டி.எம்.ஜெயரட்ண

# வாய்ப்பினை இழந்தார் அநுரா!

## புதிய அமைச்சரவையும் இன்று தெரிவு ?

(நமது நிருபர்)

**இலங்கையின் புதிய பிரதமராக சிறிலங்கா சுதந்திரக்கட்சியின் மூத்த உறுப்பினரும் தபால் தொலைத்தொடர்பு அமைச்சருமான டி.எம்.ஜெயரட்ண இன்று பதவியேற்கிறார்.**

**முன்னாள் பிரதமர் மகிந்த ராஜபக்ஷ ஜனாதிபதியாகத் தெரிவு செய்யப்பட்டதையடுத்து பிரதமர் பதவிக்கு டி.எம்.ஜெயரட்ண தெரிவு செய்யப்பட்டுள்ளதாக ஜனாதிபதி செயலக வட்டாரங்கள் தெரிவித்துள்ளன. இதன் மூலம் பிரதமராகும் வாய்ப்பை இழந்தார் அநுரா பண்டாரநாயக்கா.** (12 ஆம் பக்கம் பார்க்க)

## கிழக்கில் கடும் மழை மக்கள் இடம் பெயர்வு

(மட்டக்களப்பு)

கிழக்கில் மட்டக்களப்பு ,திருகோணமலை மாவட்டங்களில் நேற்று முன்தினம் தொடக்கம் பெய்து வரும் கடும்மழையினால் வெள்ளப்பெருக்கு ஏற்படும் ஆபத்து ஏற்பட்டுள்ளது.

தொடரும் மழையினால் பல கிராமங்கள் நீரில் மூழ்கியுள்ளன. திருகோணமலை மாவட்டத்தில் புல்மோட்டை வீதியில் உள்ள அலஸ்த்தோட்டம், புளியங்குளம், நித்தியபுரி, கடற்கரைச்சேனை, கணேசபுரம், கூனித்தீவு போன்ற இடங்கள் நீரில்மூழ்கியுள்ளன.

இதனால் இப்பகுதியில் உள்ள மக்கள் தமது வீடுகளை விட்டு வெளியேறியுள்ளனர். குறிப்பிட்ட இடங்களில் மழைவெள்ளம் 2 அடி உயரத்திற்கு ஏற்பட்டுள்ளது.

தொடர்ந்தும் மழை பெய்யும் நிலை ஏற்பட்டால் மக்கள் பொதுக்கட்டடங்களிலும் ஆலயங்களிலும் தங்க வைப்பதற்கான ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாக திருகோணமலை மாவட்ட மேலதிக பிரதேச செயலாளர் திருமதி ஜெயவீரன் தெரிவித்துள்ளார்.

இதேவேளை பாராளுமன்ற உறுப்பினர் துரை ரட்ணசிங்கம் (12 ஆம் பக்கம் பார்க்க)

## முஸ்லிம் தம்பதியர் நேற்று அதிகாலை மீராவோடையில் சுட்டுக் கொலை

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு மீராவோடையில் நேற்று அதிகாலை ஆயுதபாணிகளால் முஸ்லிம் தம்பதிகள் சுட்டுக்கொல்லப்பட்டுள்ளனர்.

அவர்கள் வீட்டில் வைத்தே சுடப்பட்டுள்ளனர். ஐ.தே.க. ஆதரவாளரான மீராசாகிபு லெப்பை அகமது லெப்பை மற்றும் அவரது மனைவியான மொகமது லெப்பை பௌசியா ஆகியோரே கொல்லப்பட்டவர்கள் என தெரிவிக்கப்படுகிறது.

மீராசாகிபு அகமது லெப்பை மத்திய கிழக்கிற்கு ஆட்களை அனுப்பும் உபமுகவர் என்றும் , கடந்த அரச தலைவர் தேர்தலில் ஐ.தே.கவிற்கு ஆதரவு அளித்தவர் என்றும் அந்தப் பிரதேச மக்கள் தெரிவித்துள்ளனர்.

அரசியல் காரணம் அல்லது மத்திய கிழக்கு வேலைவாய்ப்பு தெடர்பான கொடுக்கள் வாங்கல் பிரச்சினை காரணமாக இவ் இரட்டைக் கொலை இடம் பெற்றிருக்கலாம் என விசாரனைகளை மேற்கொண்டு வரும் வாழைச்சேனைப் பொலிஸார் சந்தேகம் வெளியிட்டுள்ளனர்.

கொலையாளிகள் முதலில் கணவனைச் சுட்டுக் கொன்று விட்டு சென்றதாகவும் பின்னர் மீண்டும் திரும்பிச் சென்று மனைவியைச் சுட்டதாகவும் விசாரனைகள் மூலம் தெரிய வந்துள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர். (ச-8)

## வடமராட்சி குடத்தனையில் இளம் பெண்ணின் சடலம் மீட்பு

(துன்னாலை)

வடமராட்சி குடத்தனை வலிகண்டிப் பகுதியில் உள்ள பாழடைந்த கட்டடம் ஒன்றில் இருந்து இளம் பெண்ணின் சடலம் ஒன்று நேற்று மீட்கப்பட்டுள்ளது.

அப்பகுதி மக்களால் கண்டு பிடிக்கப்பட்ட சடலம் குறித்து பொலிஸாருக்கு அறிவிக்கப்பட்டதையடுத்து சம்பவ இடத்திற்குச் சென்ற பருத்தித்துறை பொலிஸார் சடலத்தை அடையாளம் காணும் பொருட்டு மந்திகை மருத்துவமனையில் ஒப்படைத்துள்ளனர்.

சுமார் 18-20 வயது மதிக்கத்தக்க அப் பெண்ணின் சடலத்தின் கழுத்தில் கறுப்பு நிற ரிபன் காணப்படுவதாகவும் கழுத்து நெரிக்கப்பட்டே அப்பெண் கொலை செய்யப்பட்டிருக்கலாம் எனவும் பொலிஸார் சந்தேகம் வெளியிட்டுள்ளனர்.

நேற்று பிற்பகல் 3 மணியளவில் அப்பகுதி மக்களால் கண்டு பிடிக்கப்பட்ட சடலம் குறித்து எவ்வித தகவலும் கிடைக்கவில்லை எனவும் அதுகுறித்து விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாகவும் பொலிஸார் தெரிவித்துள்ளனர். (ச-130,35,101)

EXPOAIR
your friend in the skies...
ஒதுக்கீடுகளுக்கு அழையுங்கள்
021 - 222 3891, 222 6297, 077-2349999,
011-2372952/3, 011-2360290/1
e.mail:- jaffna@expoavi.com, reservations@expoavi.com.

எக்ஸ்போ எயார்

வானத்தில் உங்கள் நண்பன்...
இலங்கையில் முன்னணி வகிக்கும் உள்ளூர் விமான சேவை...

நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

# ஒற்றையாட்சி முறையை அரசு எம்மீது திணிக்க முயலுமாயின் பேரழிவைச் சந்திக்க நேரிடும்

## -மா.க.ஈழவேந்தன் எம்.பி

(யாழ்ப்பாணம்)

**தமிழீழ விடுதலைப்புலிகளின் அரசியல்துறைப் பொறுப்பாளர் தமிழ்ச்செல்வன் தக்க தருணத்தில் தக்கதோர் எச்சரிக்கையை அனைத்துலக ஆங்கில இதழான "டைம்ஸ்" (Times) இதழுக்கு தாயகக் கோட்பாடு பற்றி வழங்கி இருப்பது சிங்கள இனத்தை சிந்திக்கவைக்க வேண்டும். அவர்கள் சிந்திக்க மறுப்பின் விளைவுகளுக்கு அவர்களே பொறுப்பு இவ்வாறு தமிழ்த்தேசியகூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினர் மா.க.ஈழவேந்தன் தெரிவித்துள்ளார்.**

இது தொடர்பில் அவர் விடுத்துள்ள அறிக்கையில்,

"தமிழர் தாயகக் கோட்பாட்டை நிராகரித்து ஒற்றையாட்சியின் கோட்பாட்டின் அடிப்படையிலேயே தீர்வென்று சிங்கள தேசம் முரண்டு பிடித்தால் அவர்கள் பேரழிவை சந்திக்க நேரிடும்'' என தமிழீழ அரசியற்றுறை பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வன் எச்சரித்துள்ளது வெறும் சொற்களில் வழங்கப்பட்டுள்ள எச்சரிக்கை அல்ல, மாறாக விரைவில் செயல் வடிவம் பெறப்போவது உறுதி.

தேர்தலுக்கு முன்பு தமிழர்களுக்கு வாக்குறுதிகளை அள்ளி வழங்குவது சிங்களத் தலைவர்களுடைய வழமையான செயல் தேர்தல் முடிவுற்ற நிலையில் அவர்களுடைய வாக்குறுதி அனைத்தும் காற்றில் கலந்துவிடும். இதுவே ஈழத்தமிழ் மக்கள் 50 ஆண்டுகளுக்கு மேலாக கண்ட கசப்பான அனுபவம். தமிழ்ச்செல்வனின் கருத்து மட்டுமல்ல அனைத்து ஈழத்தமிழ் மக்களின் கருத்தும் இதுவேயாகும்.

தமிழர் இன்று எதிர்நோக்குகின்ற தலையாய பிரச்சினை தமிழ் மக்கள் தம் தாயக மண்ணில் தற்பாதுகாப்போடும் தன்மானத்தோடும் வாழப்போகிறார்களா என்பதேயாகும். இந்நிலையை நாம் அடைய முடியாவிடின் நாம் பூண்டோடு அழிக்கப்படுவது உறுதி.

1987இல் செய்யப்பட்ட இலங்கை-இந்திய ஒப்பந்தத்தில் எத்தனையோ குறைபாடுகள் உண்டு. தமிழ் மக்களுக்கு வாழ்வு கொடுக்கின்ற ஒப்பந்தமாக நாம் அதனைக் கொள்ளவில்லை. ஆனால் ஒப்பந்தத்தின் முன்னுரையில் இலங்கையின் வடகிழக்கு மாகாணம் ஈழம்வாழ் தமிழ் மக்களின் வரலாற்று அடிப்படையிலான தாயகம் (**Historical habitation of the Tamils**) என்ற முக்கிய குறிப்பு காணப்படுகிறது. இதை மீறி சிறிலங்கா அரசு செயற்பட முன்வரின் தமிழ்ச்செல்வனின் ''தாயகக் கோட்பாட்டை நிராகரித்தால் அரசு பேரழிரைவைச் சந்திக்க நேரிடும்'' என்ற கூற்றை நாம் அப்படியே வழிமொழி கூறி வரவேற்கின்றோம். இதில் இரண்டு பட்ட கருத்திற்கு இடமில்லை.

ஒரு இனம் எதனையும் இழக்கலாம் மீண்டும் வாழ்வு பெறலாம். ஆனால் ஒரு இனம் தன் தாயகத்தை இழக்குமாயின் அதனுடைய வரலாறும் உடனடியாக முடிந்துவிடும். ஒரு இனம் தன்னைத்தான் உணர்த்துவதற்கு மட்டுமலல, ஒரு இனம் தன்னைத் தான் பாதுகாத்துக்கொள்வதற்கும் தாயகம் இன்றியமையாத கோட்பாடாகும்.

ஈழத்தமிழரின் தாயகத்தின் ஓரங்களை மட்டும் சிங்கள அரசு பறிக்கவில்லை. மாறாக எம் மண்ணின் இதயப்பகுதியை அதாவது நடுப்பகுதியைக் கூடப் பறித்து எம் நிலப்பரப்பின் தொடர்ச்சித் தன்மையை துண்டிக்க முனைகிறது.

முழத்துக்கு முழம் திருகோணமலை நகரம் எங்கும் சிங்கள இராணுவத்தை நிறுத்தி வைத்துள்ள அரசு, திருமலையின் ஏனைய பகுதிகளையும் விழுங்கி ஏப்பமிட முனைகிறது. திருமலையை தட்டிப்பறிக்கும் முயற்சி திருமலையை மட்டும் பறிக்கும் நோக்கத்தோடு மட்டும் அமையவில்லை மாறாக யாழ்ப்பாணத்தையும், மட்டக்களப்பையும் திருமலையில் இருந்து துண்டித்து தமிழரின் நிலப்பரப்பை கூறுபோடும் சதி முயற்சியாகும். இந்தச் சதிவலையில் தமிழ் இனம் விழப்போவதில்லை.

சிங்கள வெறியாட்டம் முல்லைத்தீவில், மணலாற்றிலும் தொடர்கிறது. எங்கள் மண்ணை மட்டுமல்ல, எம் கடலை மட்டு மல்ல, எங்கள் ஆற்றையும் பறிக்கின்ற திட்டமிட்ட சதி முயற்சி தொடர்கிறது.

பொறுமையின் எல்லைக்கு வந்துள்ள தமிழராகிய நாம் தமிழர் தாயகத்தைப் பறித்து ஒற்றையாட்சி முறையை எம்மீது திணிக்க அரசு முயலுமாயின் எங்கள் தமிழ்ச்செல்வன் 'சிறிலங்கா அரசு



பேரழிவை சந்திக்க நேரிடும்' என்று கூறியுள்ள கூற்று வெறும் வெற்றுரையல்ல. வெறும் வாய்வீச்சுமல்ல, மாறாக பொருள் பொதிந்த பொன்னுரையாகும் என்பதை உணர்த்துவோம்.

எங்கள் தேசியத் தலைவர் எதிர்வரும் நவம்பர் 27இல் நிகழ்த்தப் போகின்ற மாவீரர் உரையில் வழமையாக நிகழ்த்துகின்ற உரையை மிஞ்சுகின்ற அளவிற்கு ஈழத்தமிழ் மக்களுடைய உயிர்ப் பிரச்சினை எது என்பதை உணர்த்தப்போவது உறுதி. அதில் தாயகக் கோட்பாடு தமிழரின் தலையாய கோட்பாடு என்பதை அவர் வலியுறுத்துவது உறுதி இதை நாம் சொல்லாமலே உலகம் அறியும் எனக் குறிப்பிடப்பட்டுள்ளது. (த)

## இராசி பலன்

**21.11.2005**

**(கார்த்திகை 6 ,திங்கட்கிழமை)**

**பஞ்சமி முற்பகல் 10.13 மணிவரை**

**புனர்பூசம் காலை 7.24 மணிவரை**

**இராகுகாலம்- 7.40-9.10 மணிவரை**

**சுபநேரம் - 12.10-1.40 மணிவரை**

**அமிர்த சித்தம்**

| | |
|---|---|
| மேடம் | தடைப்பட்ட காரியம் கைகூடும், பொருள் சேர்க்கை, கலந்துரையாடல். |
| இடபம் | வேலைச்சுமை, கோபப்படுதல், முயற்சி தாமதம், அதிகசெலவு. |
| மிதுனம் | நல்லமுயற்சி, உறவினர் சந்திப்பு, கற்பனை மிகுதி, தொழில் சிந்தை. |
| கடகம் | வீண் செலவு, உறவினர் வெறுப்பு, காரிய அலைச்சல், சயன சுகக்குறைவு. |
| சிங்கம் | காரிய அனுகூலம், பெருமையடை தல், புதிய பொருள் சேர்க்கை, குடும்ப சுகம். |
| கன்னி | பிறர் உதவி, தொழில் நன்மை, காரிய சித்தி, நேர்மை. |
| துலாம் | புதிய திட்டமிடல், பிதாசிந்தை, முயற்சி தாமதம், அதிகபிரயாசை. |
| விருச்சிகம் | பிரயாண பயம், ஆரோக்கியக் குறைவு, சிறிய நன்மை, சோம்பல் நிலை. |
| தனுசு | சென்ற இடத்தில் செல்வாக்கு, காரிய அனுகூலம் நண்பர்கள் சந்திப்பு, பொருள் சேர்க்கை. |
| மகரம் | தொழில் நன்மை, பகைவர் நேசம், முயற்சி கைகூடும், தேகநலன். |
| கும்பம் | உடல் நலக்குறைவு, முயற்சிதாமதம், பண விரயம், குடும்பக் கவலை. |
| மீனம் | கல்வியில் ஆர்வம், மாதா சுகம், ரோக நிலை, முயற்சி தாமதம். |

**பழைய நேரப்படி கணிப்பிடப்பட்டது.**

**- வளவன்**

## 5ற்கும் மேற்பட்ட அமைச்சுக்கள் ஜே.வி.பிக்கு வழங்கப்படும்?

(கொழும்பு)

புதிய ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ தலைமையில் அமைக்கப்படவிருக்கும் புதிய அமைச்சரவையில் ஜே.வி.பிக்கும் அமைச்சுப் பொறுப்புக்கள் வழங்கப்படவுள்ளதாக ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியுடன் தொடர்புடைய வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

இவ் விடயம் தொடர்பில் அவ் வட்டாரங்கள் மேலும் தகவல் வெளியிடுகையில்,

தமீழீழ விடுதலைப் புலிகளுடன் பொதுக்கட்டமைப்பை ஏற்படுத்த சந்திரிகா முயற்சித்ததினாலேயே ஜே.வி.பி அரசாங்கத்திலிருந்து விலக வேண்டிய சூழ்நிலை ஏற்பட்டது.

இந் நிலையில், மஹிந்த ராஜபக்ஷ தான் ஜனாதிபதியானால் பொதுக்கட்டமைப்பை கைவிடுவதாக பகிரங்கமாக அறிவித்திருந்தார். எனவே, புதிய அமைச்சரவையில் 5 ற்கும் மேற்பட்ட அமைச்சுப் பதவிகள் ஜே.வி.பிக்கு வழங்கப்படும். இதற்கான ஒப்புதலை அவர்கள் தெரிவித்துவிட்டார்கள்.

மேலும், நாடாளுமன்றத்தைக் கலைத்துவிட்டு பொதுத் தேர்தலை நடத்தும் நோக்கம் தற்போதைக்கு இல்லை. ஏனைய சிறுபான்மைக் கட்சிகள் நாடாளுமன்றத்திற்கு உள்ளேயே தமது ஆதரவினை வழங்க முன்வருமென்று நம்புகின்றோம். ஐக்கிய தேசியக் கட்சி நாடாளுமன்ற உறுப்பினர்கள் சிலரும் எம் பக்கம் வருவார்கள் என எதிர்பார்க்கின்றோம்.

இந்நிலையில், பாராளுமன்றத்தில் எமக்குப் பெரும்பான்மை அதிகரிக்கும். அரச பணிகளை சுமூகமாக முன்னெடுத்துச்செல்ல இது உதவும், என்று தெரிவித்துள்ளன. (ற)

## மஹிந்தவின் பதவியேற்பை —சந்திரிகா புறக்கணிப்பு!—

ஜனாதிபதியாக மஹிந்த ராஜபக்ஷ பதவியேற்ற நிகழ்வில் பதவி விலகும் சந்திரிகா குமாரதுங்க பங்கேற்காமல் புறக்கணித்துள்ளார்.

ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பின் ஓட்டுமொத்த அமைச்சரவையும் இந்தப் பதவியேற்பு நிகழ்வில் பங்கேற்ற போதும் மஹிந்தவின் கட்சித் தலைவரும் மஹிந்தவிடம் பதவியை ஒப்படைப்பவருமான சந்திரிகா குமாரதுங்கா இந்நிகழ்ச்சியைப் புறக்கணித்தார்.

முன்னதாக சந்திரிகா குமாரதுங்கவும் இந் நிகழ்ச்சியில் பங்கேற்பார் என்று அறிவிக்கப்பட்டிருந்தது. ஆனால் கடைசி நிமிடத்தில் அவர் புறக்கணிப்பு செய்துள்ளார். ஐக்கிய தேசியக்கட்சியின் மூத்த தலைவரும் பாராளுமன்ற சபாநாயகருமான டபிள்யு ஜே.எம்.லொக்கு பண்டாரவும் இந் நிகழ்ச்சியில் கலந்துகொண்டார். (04)

## கட்டாக்காலிகளின் தொல்லை காரைநகரில் அதிகரிப்பு

(காரைநகர்)


காரைநகரில் கட்டாக்காலி கால்நடைகளின் தொல்லை அதிகரித்து வருகின்றது. இதனால் பல நூற்றுக்கணக்கான நெற்பயிர்கள் கால்நடைகளினால் சேதப்படுத்தப்பட்டு வருகின்றன.

இவ்வருடம் கால்நடைகளைக் கட்டுப்படுத்துவதற்கும், கட்டாக் காலி கால்நடைகளைப் பிடிப்பதற்கும், விவசாய சம்மேளனங்களினாலும், பிரதேச செயலகங்களினாலும் அனுமதி வழங்கப்பட்டு ஆட்களும் நியமிக்கப்பட்டுள்ளனர்.

ஆனாலும், அவர்களின் அசமந்தப் போக்கினாலும் கால்நடைகளைக் கட்டுப்படுத்துவதில் அக்கறை காட்டப்படாமையினாலுமே இவ்வாறு பயிர்கள் அழிக்கப்படுகின்றன.

கால்நடைகளின் தொல்லைகள் பற்றி காரைநகர் கமநல சேவைகள் நிலையத்திலும் காரைநகர் பிரதேச செயலகத்திலும் முறைப்பாடு செய்யப்பட்ட போதிலும் உரிய அதிகாரிகளினால் எவ்வித நடவடிக்கையும் மேற்கொள்ளப்படாததையிட்டு விவசாயிகள் கவலையடைந்துள்ளனர். (த-246)

## துயின்றது போதும்




தாமரைப் பூக்களின் தங்கக் கலசங்களே
சமாரை வீசுடும் தாமரைப் பூக்களே
பூமிப்பந்தின் புரட்சிக் கவிதைகளே
கொட்டும் மழையின் குளிர் நீர்த் தாரைகளே!
யுத்தக் களத்தின் இரத்தக் கனிகளே
நித்தமும் மறக்கொணா முத்துப் பந்தல்களே
அச்சம் மறந்த ஆனந்த நிலாக்களே
நிச்சயம் உங்கள் இலட்சியம் வெல்லும்!
முத்துக்கள் குவித்த மோகன கோவில்களே
வித்துடலான வீரச் சிறுத்தைகளே
துயின்றது போதும் எழுந்து வருவீர்
தூக்குவீர் ஆயுதம் பகையை முடிப்பீர்!

**நல்லை அமிழ்தன்**

# யாழ்.குடாநாட்டின் வீழ்ச்சியுடன் விடுதலைப் போர் இறுதியடையும்

## -கேணல் சூசை தெரிவிப்பு

(கிளிநொச்சி)

**யாழ். குடாநாட்டினது வீழ்ச்சி தான் தமிழீழ விடுதலைப்போரின் இறுதிப் போராக இருக்கும் என்று கடற்புலிகளின் சிறப்புத் தளபதி கேணல் சூசை எச்சரிக்கை விடுத்துள்ளார்.**



நேற்று முன்தினம் நடைபெற்ற லெப். கோணல் கங்கை அமரன் கடற்படை,துணைப் படை பயிற்சிப் பாசறையில் ஐந்தாம் அணி பயிற்சி நிறைவு நிகழ்வில் கலந்துகொண்டு உரையாற்றும் போதே சூசை இதனைத் தெரிவித்தார்.

அவர் அங்கு தொடர்ந்தும் உரையாற்று கையில்,

இனவாதக் கட்சிகளான ஜே.வி.பி, ஜாதிக ஹெல உறுமயவின் கட்சிகளுக்கு ஆதரவாக சிங்கள தேசத்து மக்கள் வாக்களித்திருக்கிறார்கள்.

கடந்த கால படிப்பினைகள் எல்லாவற்றையும் மறந்து விட்டு சிங்களம் நிற்கின்ற போது அவர்களுக்கு உரிய வழியில் தான் தமிழன் பதில் கூறவேண்டிய கட்டம் இது.

1983ஆம் ஆண்டு முதல் இது நாள் வரை இருந்த சிங்கள் அரசியல் தலைவர்கள்தான் போர் என்றால் போர்-சமாதானம் என்றால் சமாதானம் என்று போர் முரசு கொட்டி தமிழர்களுக்கான இராணுவக் கட்டமைப்பை உருவாக்கிய பெருமைக்குரியவர்கள்.

இப்பொழுது இருப்பது போல் 1983ஆம் ஆண்டுகளில் தமிழீழ விடுதலைப்புலிகளின் படைபலக் கட்டமைப்பு இருக்கவில்லை. அன்றைக்கு யாழ். குடாநாட்டில் தமிழ் மக்கள் இனப்படுகொலை செய்யப்பட்ட போது அந்த இனப்படுகொலையை தடுத்து நிறுத்தக் கூடிய அளவிற்கு விடுதலைப் புலிகள் வலுபடைத்தவர்களாக இருக்கவில்லை.

1987ஆம் ஆண்டு இராணுவ ஆக்கிரமிப்பு நடந்த போது அதை எதிர்கொள்ள முடியாத மிகவும் பலவீனமான நிலையில்தான் விடுதலைப் புலிகளின் கட்டமைப்பு இருந்தது. அண்டை நாடான இந்தியா எங்களுக்கு எதிராகப் போர்க்கொடி உயர்த்தியது. அந்தப் போரையும் 2 ஆயிரத்துக்கும் குறைவான விடுதலைப் புலிகள் தான் எதிர்கொண்டனர்.

இந்திய இராணுவத்துக்கு எதிராக 2 ஆண்டுகளாக சண்டை நடந்தது. அப்போது நெருக்கடியான காலகட்டம்,நெருக்கடியான சூழ்நிலை,அந்த நெருக்கடியான காலகட்டத்திலும் கூட இந்திய இராணுவத்தை விடுதலைப் புலிகள் வெளியேற்றும் அளவிற்கு பலமாக்கியது மக்கள் தான்.அந்த மக்களின் பலத்திலிருந்துதான் இன்றைக்கு தமிழீழ விடுதலைப்புலிகள் மரபு வழி இராணுவமாக-தமிழர்களின் படையாக வளர்த்து நிற்கிறார்கள்.

2001 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் வரை தமிழீழத்தில் படை நடத்திய சிங்களப் படைத் தளபதிகள் தோற்றுப் போனதாகத்தானே வரலாறு. யாரும் வென்றதாக வரலாறு இல்லை. இந்தியாவினது படைத்தளபதிகளாக இருந்தாலும் சரி,ஸ்ரீலங்காவினது படைத்தளபதிகளாக இருந்தாலும் சரி கடந்த 25 ஆண்டு காலம் விடுதலைப் புலிகளுக்கு எதிராகப் படை நடத்தி தங்களுடைய ஆயிரக்கணக்கான சிங்கள இளைஞர்களைத்தான் இழந்தார்களேயொழிய எங்களை வென்றதாக வரலாறு இல்லை.

இந்திய இராணுவத்தினது ஆக்கிரமிப்பிலிருந்து விடுபட்டு தமிழீழ விடுதலைப் போராட்டத்தை முன்னெடுக்கின்ற அந்தக் காலகட்டம் வரைக்கும் இப்போது கொண்டிருக்கிற இராணுவக் கட்டமைப்பை நாம் கொண்டிருக்கவில்லை.

தமிழர்களின் தலைவர் பிரபாகரனின் ஆட்சியில், அவரது அதிகாரத்தில் நாங்கள் ஆளப்பட வேண்டுமாக இருந்தால், தமிழர்கள் தங்களைத் தாங்களே ஆளவேண்டுமானதாக இருந்தால் அவரது காலத்திலேயே எமது இறுதி இலக்கான தமிழீழத்தை அடைவதைத் தவிர வேறு வழியில்லை.

இனவாதத்தைக் கக்கிக் கொண்டிருக்கும் ஜே.வி.பி.எங்களுக்கு முன்பாக சிங்களத்துக்கு எதிராக ஆயுதப் போராட்டத்தைத் தொடங்கியவர்கள்.ஆனால்,பிழையான வழிநடத்துதலால் ஏராளமான சிங்கள இளைஞர்கள் கொன்று குவிக்கப்பட்டதுடன் அவர்களது இலக்கை அடையவும் முடியவில்லை. ஏனென்றால்,அவர்களுக்கு என்று ஒரு தளம் இல்லை.

ஆனால், எங்களுடைய விடுதலைப் போராட்ட காலத்தில் போராட்டம் தொடங்கப்பட்ட மிகக் குறுகிய காலத்துக்குள்ளேயே விடுதலைப் புலிகளுக்கு என்று ஒரு தளப் பிராந்தியத்தை உருவாக்கி,அந்தத் தளத்தில் எமது படையணிகளை நிலைகொள்ள வைத்து எம்முடைய விடுதலைப் போராட்டத்தை இந்த அளவிற்கு வீச்சாக்கி விடுதலைப் போராட்டத்தை நகர்த்தியவர் எமது தலைவர்.

1987ஆம் ஆண்டு ஏற்பட்ட நெருக்கடி. அன்று மிகக் குறைவான போராளிகளாக இருந்தபோது, சிங்களம் படை எடுத்து வந்து நிலை கொண்டிருந்த போது கரும்புலிகள் என்ற புதிய ஆயுதத்தைப் பிரயோகித்து சிங்களத்தை தலைகுனிய வைத்து இந்தியாவிடம் மண்டியிட வைத்தவர் எங்களுடைய தலைவர்.

இன்று ஆட்சிப் பொறுப்பேற்கின்ற சிங்களத் தலைமைகளுக்கு விடுதலைப் புலிகளின் பலம் பற்றித் தெரியாமல் இருக்கலாம். ஆனால், இதுவரை படை நடத்திய சிங்களப் படைகளுக்கு விடுதலைப் புலிகளின் பலம் என்ன என்று நன்குதெரியும்.

நமது தலைவரின் சமாதான வழியில் சிங்களத்தின் தலைமை பேசித் தீர்வு காணப் போவது கிடையாது. இதை சிங்கள மக்களும் நான்காண்டுகாலமாக மறந்துவிட்டார்கள்.

நான்காண்டுகளாக போர் ஓய்ந்து நிற்கிறது. ஆனால், நடந்த திசை, பக்கங்கள் ,பாதைகள் எல்லாவற்றையும் மறந்துவிட்டு இன்றைக்கு இனவாதத்துக்கு மட்டும் சிங்களவர்கள் வாக்களித்து இனவாதத்தை வலுவேற்றியிருக்கிறார்கள்.

இவ் வலுவலை உடைத்து தமிழீழ விடுதலைப் போராட்டத்தின் இறுதிக் கட்டத்துக்குத் தள்ளி விடுதலையை வீச்சாக்க வேண்டியப் பொறுப்பு தமிழ் மக்களைத்தான் சாரும். 1988-89ஆம் ஆண்டுகளில் நாம் நெருக்கடியைச் சந்தித்த போது நாம் ஒரு தளமமைத்து செயற்பட வலுச் சேர்த்தவர்கள் எம்மக்கள். அந்த மக்களின் எழுச்சியுடன் தான் போராட்டம் வீச்சாகியது.

இன்றைக்கு கடற்படை வலுவடைந்திருக்கிறது. என்றால் அன்று கடற்புலிகளின் கரங்களை மக்[illegible] வலுப்படுத்தியதால்தான் அது நடந்[illegible]ளது.

பூநக[illegible]யில் நாம் 42 அடி நீளமுள்ள 5 நீருந்து விசைப் படகுகளைக் கைப்பற்றினோம். பூநகரிப் பகுதியில் தொடராக விமானக் குண்டுவீச்சு நடந்த நேரத்திலும் பூநகரியிலிருந்து வடமராட்சி தளத்துக்கு அவற்றை யாழ். குடா நாட்டின் எல்லாப் பகுதி மக்களுமாக இணைந்து பத்திரமாகச் சேர்த்தபடியால் தான் இன்றைக்கு நாம் கடற்படையாக வலுவடைந்துள்ளோம்.

ஓயாத அலை-01 இல் நாம் கைப்பற்றிய பீரங்கியை எடுத்துவர பிரதான பாதை இருக்க வில்லை. யுத்தம் நடந்த நேரத்திலும் அவற்றை நாம் கடற்கரையூடாக நகர்த்தியெடுத்து வந்ததால்தான் ஓயாத அலைகள்-01 ஐ வென்றோம்.

அதேபோல்தான் வெற்றிலைக்கேணியிலிருந்து குடாரப்பு தரை இறக்கம் பங்குனி மாதத்தில் வழமைக்கு மாறாக கடல் கொந்தளித்த போதும் அந்தக் கொந்தளிப்புக்கு ஈடாக கடற்புலிகளோடு சேர்ந்து மக்களின் படகுகள் படையணிகளைப் பத்திரமாகக் கொண்டு போய் இறக்கி பாரிய வெற்றியைப் பெறுவதற்கு உறுதுணையாக இருந்தவர்கள் எம் மக்கள்.

இன்று குடாநாட்டிலே 40 ஆயிரம் சிங்களப் படைகள் உள்ளன. இவர்கள் இங்கிருந்து தப்பிப்போக ஒரே ஒரு வழி கடல் பாதை மட்டும்தான். இந்தக் குடநாட்டினது வீழ்ச்சி தான் தமிழீழ விடுதலைப் போரின் இறுதிப் போராக இருக்கும். அதில் மாற்ற மில்லை என்றார். (ரு-4)

# மஹிந்தவின் வெற்றியால் அமைதி முயற்சிகள் பாதிக்கும்

## -வைகோ சுட்டிக்காட்டு

(கொழும்பு)

ஜனாதிபதியாக மஹிந்த ராஜபக்ஷ வெற்றி பெற்றுள்ளதால் நோர்வேயால் முன் னெடுக்கப்



பட்டிருக்கும் அமைதி முயற்சிகள் பாதிக்கப்படும் என்று மறுமலர்ச்சி திராவிட முன்னேற்றக் கழகத்தின் பொதுச்செயலாளர் வைகோ கருத்துத் தெரிவித்துள்ளார்.

கோவை விமான நிலையத்தில் நேற்று முன்தினம் ஊடகவியலாளர்களிடம் கருத்து வெளியிடுகையிலேயே அவர் இதனைத் தெரிவித்தார்.

பல ஆண்டுகளாக இலங்கைத் தமிழர்களுக்கான உரிமைகள் தொடர்ச்சியாக மறுக்கப்பட்டு வருகின்றன. அது இன்னமும் நீடிக்கின்றன. தமிழ் மக்கள் தங்களது எதிர்ப்பை வெளிப்படுத்தும் வகையில் ஏழரை இலட்சம் தமிழ் வாக்களார்கள் உள்ள யாழ்ப்பாணத்தில் சில ஆயிரம் வாக்காளர்கள்தான் வாக்களித்திருக்கிறார்கள் எனவும் வைகோ தெரிவித்துள்ளார். (ரு-4)

# கடற்படை வீரர் கைது

திருகோணமலை கடற்படையின் ஆயுதக் களஞ்சியத்தில் திருடிய இரண்டு கைக்குண்டுகளுடன் கடற்படைவீரர் ஒருவர் பொலிஸாரினால் கைது செய்யப்பட்டுள்ளார்.

பிரஸ்தாப சந்தேக நபர் திருகோணமலை கடற்படைமுகாமில் கடமையாற்றியவர் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

கைதுசெய்யப்பட்ட கடற்படை வீரர் திரு கோணமலை நீதிமன்றில் நேற்று முன் தினம் ஆஜர்செய்யப்பட்டபோது இன்று வரை விளக்க மறியலில் வைக்குமாறு உத்தரவிடப்பட்டது. (ரு-8)



பருத்தித்துறை சிவன் ஆலய சைவநூல் நிலைய வெளியீடான இளைப்பாறிய பிரதிக்கல்விப் பணிப்பாளர் வீ.எஸ். ஏகாம்பரநாதனின் 'கேதார கௌரி விரதம் நூல் உரை' வெளியீட்டு விழாவில் சங்கீத பூஷணம் திருமதி எஸ். கோபாலசாமி இறைகீதம் இசைப்பதையும், கலாநிதி மனோன்மணி சண்முகதாஸ் உரையாற்றுவதையும், நூல் முதற்பிரதியை இலங்கை வங்கி பிரதிப் பொதுமுகாமையாளர் கே. பாலசுப்பிரமணியம் யாழ்.பல்கலைக்கழக ஊடக வளங்கள் மற்றும் பயிற்சி நிலையப் பணிப்பாளர் பேராசிரியர் ஏ.சண்முகதாஸிடமிருந்து பெற்றுக்கொள்வதையும்,நிலையச் செயலாளரான நூலகர் எஸ்.திருச்செல்வம், விழாத்தலைவர் சைவப்புலவர் எம்.எஸ்.வேதாரணியக் குருக்கள், சிவஸ்ரீ எஸ்.தண்டபாணி தேசிகர்,நூலாசிரியர் யாழ். பல்கலைக்கழக சட்டத்துறைத் தலைவர் பேராசிரியர் என்.ஞானக்குமரன்,சிவஸ்ரீ கே.சிவநேசக் குருக்கள் ஆகியோரையும் படங்களில் காணலாம். (படங்கள்:-பரு.நிருபர்)

## இன்று ஒரு தகவல்

# ஆளுமைக் கோளாறுகள்

ஒருவன் எப்படி நடந்து கொள்கிறான் என்பதை வைத்துத் தான் அந்த ஆள் எப்படி என்பதை நாம் முடிவு செய்கிறோம். ஆளுமை என்று சொல்கிறோமல்லவா?... அதற்கு... சூழ்நிலைகளை ஆள்கின்ற தன்மை என்று விளக்கம் கொடுக்கிறார் ஒரு உளவியல் நிபுணர். சரி... ஒரு மனிதனுடைய ஆளுமையை உருவாக்கும் விடயங்கள் என்னென்ன? பிறப்பு-வளர்க்கப்படும் விதம் ,படிப்பு, நண்பர்கள், சமுதாயம் என நிறைய உண்டு.

ஆளுமையின் அடிப்படையில் சில மனநோய்கள் உண்டாகும். அதெல்லாம் என்னென்னவென்பதைத் தெரிந்து வைத்துக் கொண்டால் நம்முடன் இருப்பவர்களை அடையாளம் கண்டு பிடிப்பதற்கு அது மிகவும் உபயோகமாக இருக்கும். பரனாய்டு ஆளுமை என ஒன்று. இந்தக் கோளாறு உள்ளவர்கள் எப்படி இருப்பார்கள் தெரியுமா? அதிக உணர்ச்சி,சந்தேகம்,பொறாமை அதிகமாக இருக்கும்.வளைந்து கொடுக்கமாட்டார்கள். அடுத்தவர்களோடு இணக்கமான உறவு இருக்காது. அவர்கள் செய்யும் தவறுகளுக்கெல்லாம் அடுத்தவர்களைக் குறை கூறிக்கொண்டிருப்பார்கள் இது ஒரு ரகம்.

அடுத்தது ஸ்கிசொய்ட் ஆளுமை. இந்தக் கோளாறு உள்ளவர்கள் அடுத்தவர்களுடன் பழகக் கூச்சப்படுவார்கள். சிறிய வயதிலேயே இது ஆரம்பமாகிவிடும். பகல் கனவில் சஞ்சரிப்பார்கள். அவர்களுடைய விரோதம், கோபம் போன்றவற்றைக் கூட வெளியே காட்டிக்கொள்ள முடியாமல் இருப்பார்கள். இவர்களுக்கு அகமுகம். பிரச்சினைகளிலிருந்து ஒதுங்கி எதிலும் ஈடுபாடு இல்லாதவர்களாக இருப்பார்கள். இப்படி ஒரு ரகம்.

அடுத்தது சைக்லோ தைமிக் ஆளுமை. உணர்ச்சிகளில் ஏற்றத்தாழ்வு அதிகமாக இருக்கும். சில சமயங்களில் மகிழ்ச்சியாக இருப்பார்கள்... சில சமயம் சோகமாக உட்கார்ந்திருப்பார்கள். அவர்களது மன நிலைக்குத் தகுந்த மாதிரி சமூக நிகழ்ச்சிகளில் பங்கெடுத்துக்கொள்வார்கள்.

இன்னொருவகை எண்ணப்பீடிகை ஆளுமை. இவர்களுக்கெல்லாம் கரெக்டாக இருக்க வேண்டும்.சட்டதிட்டங்களில் ஒரு ஒழுங்கு முறை. இப்படி எதிர்பார்க்கும் மனோபாவம். இவர்களுடைய எதிர்பார்ப்புக்கும் வரன்முறைக்கும் மற்றவர்கள் கட்டுப்படவேண்டும் என்று நினைப்பார்கள். இந்த நிலைமை நீடித்தால் என்ன ஆகும் தெரியுமா? அலைக்கழிக்கும் எண்ணங்கள்... திரும்பத் திரும்ப ஒரே செயலைச் செய்யத் தூண்டும் மனத்தளர்ச்சிக்கு ஆளாகிவிடுவார்கள்.

அடுத்தது ஹிஸ்டீரியா ஆளுமை. சிறிய விஷயங்களையெல்லாம் பெரிதுபடுத்தி நாடகமாக்கும் நடிகர்கள் இவர்கள். உணர்ச்சி அதிகம் உள்ளவர்கள். இவர்களின் மனவெழுச்சியில் பக்குவமின்மை, குழந்தைத் தனம், முதிர்ச்சியின்மை எல்லாம் இருக்கும்.தன்னலம்மிக்க குணம்,பிறர் தன்னை மட்டுமே கவனிக்க வேண்டும் என்று நினைத்து செயல்படுவார்கள்.

அடுத்த ரகம் வளர்ச்சியற்ற ஆளுமை.அடுத்தவர்களுடன் இணங்கிப் போக முடியாதவர்கள்.அறிவு, மனவெழுச்சி,சமூக உறவு, இதிலெல்லாம் போதுமான வளர்ச்சியையும்,நிறைவையும் பெறமுடியாதவர்கள்.இவர்களால் வாழ்க்கையில் முன்னேற முடியாது.பிச்சைக்காரர்கள்,குற்றவாளிகள் ... இவர்களிடமெல்லாம் இதுபோன்ற ஆளுமை அதிகமாக இருக்கும்.

அடுத்தது சோர்வுடைய ஆளுமை.எதிலும் உற்சாகமில்லாமல் சோர்ந்து போய் இருப்பார்கள்.அதற்கெல்லாம் நமக்கு வலிமை இல்லை என்று சொல்லிக் கொண்டிருப்பார்கள்.சிறு விடயங்களுக்கும் அதிர்ச்சி அடைவார்கள்.வாழ்வின் சுவையை அனுபவிக்க முடியாதவர்கள்.

இன்னொரு ரகம் கொதித்தெழும் ஆளுமை. எதற்கெடுத்தாலும் ஆத்திரம், குரோதம், வன்செயல் இதிலெல்லாம் ஈடுபாடு... என இருப்பவர்கள்.

நத்தை வகை ஆளுமை என ஒன்று. அடுத்தவர்கள் மீது விரோதம் இருக்கும்.அடிக்க வேண்டும் என்ற எண்ணம் இருக்கும். ஆனால் அதை அப்படியே வெளியே காட்டாமல் அதேசமயம் அமைதியான முறையில் வெறுப்பை வெளிக்காட்டும் ரகம். இவர்களெல்லாம் அமைதியாக இருந்துகொண்டே நினைத்ததை நிறைவேற்றிக்கொள்வார்கள்.

முன் ஜாக்கிரதை ஆளுமை ஒரு ரகம்.பாதுகாப்பின்மை, சந்தேகம்,முழுமையின்மை போன்ற மனப்போக்கு அதிகமாக இருப்பதனால் அகம்பாவம், பிடிவாதம், எச்சரிக்கை எல்லாம் அளவுக்கு மீறி இருக்கும்.

இதுவரைக்கும் நாம் பேசிக் கொண்டிருந்த ஆளுமைப் பண்புகள் அளவுக்கு மீறி அதிகமாகிவிட்டதென்றால் ஆளுமைக் கோளாறுகள் ஏற்படும்.அதன் அடிப்படையில் மனவியாதிகள் வரும். இதனால் இணக்கமான எல்லோரும் விரும்பும் இயல்பான ஆளுமையைப் பெற நாம் முயற்சிக்க வேண்டும்.

ஒருவர் ஒரு மனோதத்துவ மருத்துவரைத் தேடிவந்தார். “டாக்டர் எனக்கு மனதில் ஏதோ வியாதி. ஆளுமைக் கோளாறு அதாவது எனக்கு சீக்கிரம் செத்துப் போகலாம் என்று தோன்றுகிறது’’என்றார். உடனே அந்த டாக்டர் “சரி... அப்படியென்றால் இங்கேயே இருங்கள்... நான் வைத்தியம் செய்கிறேன்” என்றார்.

தென்கச்சி கோ. சுவாமிநாதன்

# மஹிந்தவின் தேர்தல் வெற்றியால் பெரும் மகிழ்ச்சியடையும் இந்தியா

## ‘ஸ்ரட்போர்’ சர்வதேச புலனாய்வு இணையத்தளம் கருத்து

(கொழும்பு)

ஜனாதிபதித் தேர்தலில் மஹிந்த ராஜபக்ஷ வெற்றியடைந்திருப்பதன் மூலம் இந்தியா மகிழ்சியடைந்திருப்பதாக சர்வதேச புலனாய்வாளர்களின் இணையத்தளமான ஸ்ரட்போர் கருத்துத் தெரிவித்துள்ளது.

ஜனாதிபதித் தேர்தல் குறித்து அந்த இணையத்தளம் வெளிட்டுள்ள ஆய்வுக் கட்டுரையில்,

ஸ்ரீலங்காவின் முன்னாள் பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவை நவம்பர் 17ஆம் திகதியன்று நடைபெற்ற தேர்தலில் பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ தோற்கடித்துள்ளார்.

மஹிந்த ராஜபக்ஷவின் 6 ஆண்டுகால ஆட்சியில் தமிழீழ விடுதலைப் புலிகளுடனான அமைதி முயற்சியில் சிறிய அளவிலான முன்னேற்றமும், ஸ்ரீலங்கா விவகாரங்களில் இந்தியத் தலையீடானது பாரிய அளவிலானதுமாகவும் இருக்கக் கூடும்.

நாம் முன்னமே தெரிவித்தது போன்று ரணில் விக்கிரமசிங்கவை சிறிது கூடுதல் வாக்குகள் பெற்று மஹிந்த ராஜபக்ஷ வென்றுள்ளார். குறிப்பிடத்தக்க வகையில் தமிழர்களும் முஸ்லிம்களும் ரணில் விக்கிரமசிங்கவை ஆதரித்த போதும் தமிழீழ விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டில் உள்ள வடக்கு- கிழக்குப் பிரதேசத்தில் வாழ்கின்ற தமிழர்கள் தேர்தல் புறக்கணிப்பு செய்ததால் மஹிந்த ராஜபக்ஷ வெற்றி பெற்றுவிட்டார்.

பொருளாதாரத் துறை முகாம்களில், மஹிந்த ராஜபக்ஷவினது வெற்றியானது அந்நிய முதலீட்டாளர்களிடையே அதிருப்தியை ஏற்படுத்தியிருக்கிறது. ஸ்ரீலங்காவினது பாதுகாப்பான பொருளாதாரக் கொள்கையை அவர் செயற்படுத்தத் திட்டமிட்டிருப்பதால் இந்த அதிருப்தி உருவாகியுள்ளது.

மேலும், விடுதலைப் புலிகள் நிவாரணங்களைப் பெறுவதற்கான ஆழிப்பேரலை பொதுக்கட்டமைப்பினையும் கைவிடவுள்ளதாக மஹிந்த ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

மஹிந்த ராஜபக்ஷவினது தமிழீழ விடுதலைப் புலிகள் மீதான கடும் போக்கான நிலையானது ரணில் விக்கிரமசிங்கவினால் உருவாக்கப்பட்ட யுத்த நிறுத்த ஒப்பந்தத்துக்கு நல்லதல்ல. தற்போதைய யுத்த நிறுத்த ஒப்பந்தத்தை முற்றாக மாறியமைத்தல், அமைதி முயற்சிகளில் நோர்வேயினது அனுசரணைப் பங்கைக் குறைத்தல் மற்றும் தமிழீழ விடுதலைப் புலிகளுக்கு சிக்கலை ஏற்படுத்தும் வகையில் அனைத்துத்தமிழக் கட்சிகளுடனும் பேச்சுகளை நடத்துதல் ஆகிய வையும் மஹிந்த ராஜபக்ஷவினது எண்ணங்களாகும்.

ரணில் விக்கிரமசிங்கவின் போக்கிலிருந்து மாறுபட்ட கடும் போக்காக மஹிந்த ராஜபக்ஷவினது செயற்பாடுகள் உள்ளன. இவைகள் ஒருபுறமிருக்க, இந்தியாவுடனான உறவுகளை வலுப்படுத்திக் கொள்ள மஹிந்த ராஜபக்ஷ எண்ணுகின்றார்.

இதற்கமைய தேக்கமடைந்துள்ள அமைதிப் பேச்சுக்கள் தொடர்பில் இந்தியா பாரிய பங்காற்ற மஹிந்த அனுமதிக்கலாம். தெற்காசியாவின் பெரிய அண்ணனாக தெற்காசிய விவகாரங்களில் தன்னை வெளிப்படுத்திக் கொண்டிருக்கும் இந்தியாவுக்கு இது நல்ல செய்தி.தெற்காசியப் பிராந்தியத்தில் தன் நடவடிக்கைகளுக்கு ஸ்ரீலங்காவினது ஆதரவை இனிவரும் காலத்தில் இந்தியா பயன்படுத்திக் கொள்ளக் கூடும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது (ந)

## தென்னிலங்கைக்கு

# அபாயமான செய்தியை எடுத்துச் சொல்லும் யாழ்.மாவட்டத்தின் தேர்தல் புறக்கணிப்பு

## -பிரபல சிங்கள செய்தி ஆய்வாளர் நளின் சேனநாயக்க

(கொழும்பு)

ஜனாதிபதித் தேர்தல் வாக்களிப்பை யாழ். மாவட்டம் முற்றாக தவிர்த்தது ஒரு அபாயகரமான செய்தியை கொழும்பிற்குக் கூறியுள்ளதாக பிரபல சிங்கள செய்தி ஆய்வாளர் நளின் சேனநாயக்க தெரிவித்துள்ளார்.

செய்தி ஆய்வாளர் நளின் சேனநாயக்க இது தொடர்பில் மேலும் தெரிவிக்கையில்,

அரசின் பூரண கட்டுப்பாட்டின் கீழ் யாழ்ப்பாணம் இருப்பதாகவும் சுமார் 50 ஆயிரத்துக்கும் மேற்பட்ட படைகள் பாதுகாப்பை உறுதிப்படுத்தி அங்கு நாளாந்த நிர்வாகம் வழமையாக நடைபெறுவதான ஒரு தோற்றத்தையுமே அரசும், செய்தி நிறுவனங்களும் இதுவரை எமக்குக்காட்டி வந்தன.

ஆனால் விடுதலைப் புலிகளின் விருப்பிற்கு அமைய யாழ். மாவட்டம் முற்றாக வாக்களிப்பைத் தவிர்த்தமையானது அங்கு அரசாங்கமோ அல்லது அரச படைகளோ முற்றாக செயலிழந்து போயுள்ளதையே காட்டுகிறது.

யாழ் .குடாநாடு கூட விடுதலைப் புலிகளின் பூரண கட்டுப்பாட்டின் கீழ் உள்ளது என்கின்ற உண்மையை இந்தத் தேர்தல் புகட்டியுள்ளது.

வடபகுதியைத் தம்மால் ஆளமுடியும் எனக் கூறிய அரசியல்வாதிகள் இந்தத் தேர்தல் முடிவுகள் குறித்து கற்றுக்கொள்ள வேண்டிய மிகவும் அபாயகரமான செய்தி ஒன்று உள்ளது.

எமது படைகளின் கட்டுப்பாட்டின் கீழ் யாழ்.குடாநாடு இருப்பதாக நாம் எண்ணிக்கொண்டிருக்கும் இந்நேரத்திலேயே அது விடுதலைப் புலிகளின் பூரணகட்டுப்பாட்டின் கீழ் உள்ளது என்ற உண்மையை அனைவரும் புரிந்துகொள்ளவேண்டும். இந்நிலையில், அங்குள்ள எமது படைகளை முற்றுகையிட்டு விடுதலைப் புலிகள் தாக்குவார்களாயின் நிலைமை அபாயமானதாகும்.

இவ் உண்மையை உணராமல் இருக்கும் அரசியல்வாதிகள் இதனைப் புரிந்துகொள்ள வேண்டும், என்றும் குறிப்பிட்டுள்ளார். (ந-4)

# ‘யானை-புலி கூட்டணி’ பிரசாரம் பொய்யாகிப் போனதில் மகிழ்ச்சி

## -உடுவே தம்மாலோக தேரர்

(கொழும்பு)

ஜனாதிபதித் தேர்தலில் ரணில் விக்கிரமசிங்கவுக்கு வாக்களிக்காததால் ‘யானை-புலி கூட்டணி” என்ற எதிர்க் கட்சியினரது பிரசாரம் பொய்யாகிவிட்டதில் மகிழ்ச்சியடைவதாக உடுவே தம்மாலோக தேரர் தெரிவித்துள்ளார்.

கிராமப்புற அளவில் ஐக்கிய தேசியக் கட்சியின் கட்டமைப்பு பலவீனமாக உள்ளது. அது வலுப்படுத்தப்பட வேண்டும் . நாட்டை ரணில் பிளவுபடுத்திவிடுவார் என்று மேற்கொள்ளப்பட்ட பொய்ப் பிரசாரத்தினால் தென்னிலங்கை மக்களின் வாக்குகள் ரணிலுக்கு கிடைக்கவில்லை. ஜே.வி.பியினர் தான் இந்த மூளைச் சலவை செயற்பாடுகளை மேற்கொண்டனர்.

ரணில் விக்கிரமசிங்கவை தமிழீழ விடுதலைப் புலிகளும் ஆதரிக்காதது மிகழ்ச்சிதான். யானை-புலி கூட்டணி அமைந்துள்ளதாக மேற்கொள்ளப்பட்ட பிரசாரங்கள் பொய்யானவை என்று இதன் மூலம் நிருபித்துள்ளது.

தென்னிலங்கையில் உள்ள தமிழர்களும் கூட ரணிலுக்கு இந்த முறை வாக்களிக்கவில்லை. அப்படியான நிலையில் யானை-புலி கூட்டணி எப்படி இருக்க முடியும்? தேர்தல் முடிவுகளையடுத்து ஐக்கிய தேசியக் கட்சியின் தலைமையில் மாற்றம் எதுவும் தேவையில்லை என்று தான் கருதுவதாகவும் உடுவே தம்மாலோக தேரர் மேலும் தெரிவித்துள்ளார். (ந-4)

# குழு மோதல் ஒருவர் பலி

(திருகோணமலை)

கட்டுப்பொத்த மெதகமப்பகுதியில் நேற்று முன் தினம் அதிகாலை இடம்பெற்ற மோதல் சம்பவத்தில் ஒருவர் உயிரிழந்துள்ளார். குறிப்பிட்ட இடத்தை வசிப்பிடமாகக் கொண்ட 38 வயதுடைய நபர் ஒருவரே இந்த மோதல் சம்பவத்தில் உயிரிழந்துள்ளார்.

உயிரிழந்தவருக்கும் வேறு ஒரு நபருக்கும் இடையே இடம்பெற்ற வாய்த் தர்க்கத்தின் விளைவாக ஏற்பட்ட குழு மோதலின் போதே பிரஸ்தாப நபர் உயிரிழந்துள்ளார்.

எனினும் கொலையுடன் தொடர்புடைய சந்தேக நபர்களைக் கண்டுபிடிப்பதற்கு பொலிஸார் துரித விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (ந-8)

# மஹிந்தவின் பாராளுமன்ற இடத்துக்கு நிருபமா?

ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ பொறுப்பேற்றுள்ளதையடுத்து அவரது பாராளுமன்ற இடத்துக்கு உறவினரான நிருபமா ராஜபக்ஷ தெரிவாகக் கூடும் என்று தெரிகிறது.

கடந்த 2004 ஆம் ஆண்டு பொதுத் தேர்தலில் போட்டியிட்டுத் தோல்வியடைந்தவர் நிருபமா ராஜபக்ஷ. முல்கிரிகல பாராளுமன்றத் தொகுதியில் 2 முறை தேர்வு செய்யப்பட்டவர் நிருபமா ராஜபக்ஷ.

லக்ஷ்மன் கதிர்காமர் கொல்லப்பட்டதையடுத்து ஏற்பட்டுள்ள இடத்துக்கு வடக்கு-கிழக்கு ஆளுநர் டிரோன் பெர்னாண்டோ தேசியப் பட்டியலினூடாக பரிந்துரைக்கப்படலாம் என்றும் தெரிவிக்கப்படுகிறது. (ந-4)

# மஹிந்தவின் அடுத்த பயணம்?

செய்திக்கட்டுரை

இலங்கையில் 5ஆவது ஜனாதிபதியாகத் தெரிவு செய்யப்பட்டிருக்கும் மஹிந்த ராஜபக்ஷ குறித்து பல வேறு தரப்பினரது கருத்துக்களின் தொகுப்பு இது.

இலங்கையின் புதிய ஜனாதிபதியாக சுதந்திரக்கட்சி வேட்பாளரான மஹிந்த ராஜபக்ஷவை சிங்களவர்கள் தேர்ந்தெடுத்துள்ளனர். ஜனாதிபதித் தேர்தலில் மஹிந்தவுக்கு வாக்களிக்கப்பட்ட 50 வீதமான வாக்குகளில் பெரும்பான்மையான வாக்குகள் சிங்களவர்களால் அளிக்கப்பட்டதே. மலையக, முஸ்லிம் மக்களின் பிரதேசங்களில் ரணில் விக்கிரமசிங்கவே அதிக அளவிலான வாக்குகளைப் பெற்றிருக்கிறார். அந்தப் பிரதேசங்களின் பெரும்பான்மையான தொகுதிகளில் ரணில் தான் வெற்றிபெற்றுள்ளார்.

சிங்கள தேசத்தில் வாழ்கின்ற தமிழர்களும், தமிழீழத்தில் இராணுவத்தின் ஆக்கிரமிப்புப் பிரதேசத்தில் வாழ்கின்ற தமிழர்களும் இந்தத் தேர்தலில் தமது ஆர்வமற்ற, விருப்பற்ற நிலையை வெளிப்படுத்தி உள்ளனர். கொழும்பு வாழ் தமிழர்கள் கூட ரணில் விக்கிரமசிங்கவுக்கு ஆதரவளிக்கவில்லை என்கிறது பி.பி.சி.செய்தி நிறுவனம் தமிழீழத்தின் இராணுவ ஆக்கிரமிப்புப் பிரதேசத்தில் மிகப் பாரிய வெற்றி பெற்ற புறக்கணிப்பு நடவடிக்கையை சர்வதேச சமூகமே வியந்து பார்த்து நிற்கிறது.

### மஹிந்தவின் ''ஆளுமை''

இந்த நிலையில் மஹிந்த ராஜபக்ஷ ஜனாதிபதியாகத் தெரிவானது இலங்கைத் தீவில் எத்தகைய செய்திகளைச் சொல்லப்போகிறது? என்பதை சர்வதேச ஊடகங்கள் அனைத்தும் இப்படிச் சொல்கின்றன. ஒற்றைவரியில்...

"கடும் போக்காளர் ராஜபக்ஷ வெற்றி'' என்று...

இலங்கை இனப்பிரச்சினையில் தமிழர் தரப்பு மீது கடும் போக்கைக் கடைபிடிக்க கூடியவராகவும் அத்தகைய நிலைப்பாடுள்ள தீவிரவாதிகளுடன் தன்னை அடையாளப்படுத்தியிருக்கின்ற மஹிந்த ராஜபக்ஷ வெற்றி பெற்றிருக்கிறார்.

மஹிந்த ராஜபகஷ என்ற மனிதரைப் பற்றிய பி.பி.சி.செய்தி நிறுவனத்தின் பார்வை இலங்கை அரசியலில் இதுவரை தலைமைத்து வமான பங்களிப்பை மஹிந்த ராஜபக்ஷ மேற்கொண்ட தில்லை. அவர் பிரதமராக இருந்த போதும் கூட சந்திரிகாவின் நிழல் பிரதமராகவே இருந்தார். ஆனால் ஜனாதிபதியாகியுள்ள அவர் தமது நிழல்களிலிருந்து வெளியே வரும் வாய்ப்பைப் பெற்றுள்ளதுடன் நாட்டினது எதிர்காலத்தில் ஒரு முக்கிய பங்காற்றவும் கூடும் என்கிறது.

ஆனால் உண்மை இதுவும் இல்லை. முன்பாவது ஆகக் குறைந்தபட்ச ஜனநாயக சக்தியாக, ஒரு கட்சித் தலைவராக இருந்த சந்திரிகாவின் நிழலில் இருந்தார் மஹிந்த ராஜபக்ஷ இப்போது...?

ஸ்ரீலங்கா சுத்திரக்கட்சியின் தலைவராக இருப்பவர் சந்திரிகா குமாரதுங்க அந்தக் கட்சியால் உத்தியோகபூர்வமான வேட்பாளராக மஹிந்த ராஜபக்ஷ அறிவிக்கப்பட்டிருந்தாலும் சொந்தக்கட்சியின் கொள்கைகளை கைவிட்டு விட்டு கடும் போக்காளர்கள் அல்லது சிங்களத் தீவிரவாதிகள் என்று உள்ளூர் மற்றும் சர்வதேச சமூகத்தினரால் கருதப்படும் ஜே.வி.பி., ஜாதிக ஹெல உறுமயவுடன் கூட்டுச் சேர்ந்து அதிகாரத்தைக் கைப்பற்றியுள்ளார்.



இப்போது... சிங்களத் தீவிரவாதிகளின் நிழல் ஜனாதிபதியாக மஹிந்த ராஜபக்ஷ இருக்கிறார் என்பதே நிதர்சனமான உண்மை.

அண்மையில் தமிழீழ விடுதலைப்புலிகளின் முக்கிய பிரமுகர் க.வே.பாலகுமாரன் 1956ஆம் ஆண்டு ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் நிறுவுனர் பண்டாரநாயக்க எந்தவகையான கோட்பாடுகளை கடைபிடித்து சிறிலங்காவில் ஒரு குடும்ப ஆட்சிக்கு வழிவகுத்தாரோ, இனச் சிக்கலைக் கூர்மைப்படுத்தினாரோ அதே வழியைத்தான் மஹிந்த ராஜபக்ஷவும் இப்போது கடைப்பிடித்து தேர்தலைச் சந்திக்கிறார் என்று தெரிவித்திருந்தார்.

அதாவது கிராமங்களில் வாழும் 75 வீதமான அடித்தட்டு சிங்களவர்களின் பிரதிநிதியாகவே மஹிந்த ராஜபக்ஷ தன்னை வெளிப்படுத்தி வருகிறார். ரணிலின் கொழும்பு மேட்டிமைத்தன கோட்பாடுகளிலிருந்து மஹிந்த விலகி, அடித்தட்டு சிங்களவரின் பிரதிநிதியாக இருக்கிறார் என்று கூறியிருந்தார்.

க.வே.பாலகுமாரனின் கூற்றை மெய்ப்பிக்கும் வகையிலேயே கொழும்பு மாவட்டத் தேர்தல் முடிவுகளும் மேட்டிமைச் சமூகத்தினரது வாக்குகளும் ரணிலுக்கும் அடித்தட்டு சிங்களவர்களது வாக்குகள் மஹிந்தவுக்கும் கிடைத்துள்ளது.

### பொருளாதாரம்

இடதுசாரி சித்தாந்தம் பேசுகிற "வலதுசாரி பேரினவாத'' ஜே.வி.பியினர், தனியார்மயமாக்கல் கொள்கைகளுக்கும் அன்னிய முதலீட்டு நிறுவனங்களுக்கும் கடும் எதிர்ப்பாளர்களாக இருப்பதால் இலங்கையின் பங்குச் சந்தை ஆட்டம்காணத் தொடங்கியுள்ளது.

அன்னிய முதலீட்டாளர்கள் அச்சமடையத் தொடங்கி உள்ளனர். இன்றைய சிறிலங்காவின் பங்கு வர்த்தகமானது, அனைத்து கொழும்பு பங்கு வர்த்தகத்தில் 171 புள்ளிகள் வீழ்ச்சியையும் மிலங்கா பங்கு வர்த்தகத்தில் 266 புள்ளிகள் வீழ்ச்சியையும் ஏற்படுத்தியிருப்பதன் மூலம் எதிர்கால இலங்கையின் பொருளாதாரப் போக்குகள் என்னவாகும் என்பதை நாம் புரிந்துகொள்ளலாம்.

மஹிந்த ராஜபக்ஷவின் தேர்வு குறித்து கொழும்பு பங்கு வர்த்தக நிறுவன பிரதிநிதி ஒருவர் கருத்துத்தெரிவிக்கையில், அமைதிப் பேச்சுகளில் மஹிந்த ராஜபக்ஷ அதிகளவிலான நெகிழ்வுத் தன்மையை கடைப்பிடிக்க வேண்டும் என்று கூறியுள்ளார்.

### மஹிந்தவின் செயற்பாடுகள்

சரி இனி மஹிந்த ராஜபக்ஷவினது செயற்பாடுகளைப் பற்றி பார்ப்போம்... மஹிந்த தனது தேர்தல் வாக்குறுதிகளில் பிரதானமாகத் தெரிவித்தவை... இலங்கை என்பது ஒற்றையாட்சி முறையாகவே நீடிக்கும் ஆனாலும் இனப்பிரச்சினைக்கு கௌரவமான தீர்வு ஏற்படுத்தப்படும்.

தமிழீழ விடுதலைப்புலிகளுடனான யுத்தநிறுத்த ஒப்பந்தத்தை மீளாய்வு செய்வோம். நான் ஜனாதிபதியாகத் தெரிவு செய்யப்பட்ட உடனே 3 மாதங்களில் தென்னிலங்கையில் ஒருமித்த கருத்தை ஏற்படுத்துவேன்.

இலங்கை இனப்பிரச்சினையில் மீண்டும் இந்தியா தலையிட வலியுறுத்துவோம். இலங்கை இனப்பிரச்சினையில் சர்வதேச சமூகத்தினது தலையீட்டைப் புறக்கணித்து நாங்களே நேரடிப் பேச்சுக்களை நடத்துவோம்.தமிழீழ விடுதலைப் புலிகளின் தலைவர் வேலுப்பிள்ளை பிரபாகரனை நானே நேரடியாக சந்தித்துப் பேசுவேன் என்று கூறியிருந்தார்.

இலங்கை இனப்பிரச்சினையில் சம தரப்பினராகிய அல்லது மாற்றுத் தரப்பினராகிய தமிழீழ விடுதலைப் புலிகளும் சரி இலங்கைத் தீவில் சமாதானம் நீடிக்க வேண்டும் என்று அனுசரணையாளர்களாக,இணைத் தலைமை நாடுகளாக தலையிடுகிற சர்வதேச சமூகமும் சரி மஹிந்த ராஜபக்ஷவின் இந்த நிலைப்பாட்டை தொடர்ந்து நிராகரித்து வருகின்றனர்.

சர்வதேச ஊடகமான டைம் ஏட்டிற்கு தமிழீழ அரசியல்துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வன் அளித்திருந்த நேர்காணலில். கூட,ஒற்றையாட்சி கோட்பாடானது கற்பனாவாதம். இலங்கைத் தீவில் தமிழர் தாயகக் கோட்பாட்டை அரச தரப்பு நிராகரிக்குமேயானால் அதற்காக அவர்கள் விலை கொடுக்க நேரிடும். அந்த விலையானது மிகக் கடுமையானதாக,பயங்கர விளைவுகளை ஏற்படுத்தக் கூடியதாக இருக்கும் என்று எச்சரித்திருந்தார்.

இந்த நிலையில் மஹிந்த ராஜபக்ஷ,அரச தலைவராகத் தெரிவு செய்யப்பட்டுவிட்டார்."மஹிந்த ராஜபக்ஷவினது தெரிவானது அமைதி முயற்சிகளுக்கு ஒரு பின்னடைவு.விடைகாணப்பட முடியாத பல்வேறு கேள்விகள் எழுந்துள்ளன''என்று அபாயமணியை அடித்திருப்பவர் தோல்வியடைந்த ஐக்கிய தேசியக் கட்சியினது வேட்பாளர் ரணில் விக்கிரமசிங்க.

ஆனால் மஹிந்த ராஜபக்ஷவோ,"நான் புதிய அணுகுமுறையைக் கடைப்பிடிக்கப்போகிறேன். தமிழீழ விடுதலைப் புலிகளின் தலைவர் பிரபாகரனுடன் நேரடிப் பேச்சுக்களை நடத்தப் போகிறேன்''என்று மீண்டும் கூறியுள்ளார்.

மஹிந்த ராஜபக்ஷவின் தெரிவு குறித்து தமிழீழ விடுதலைப்புலிகளின் ஊடக ஒருங்கிணைப்பாளர் தயா மாஸ்டர் கூறுகையில், மஹிந்த ராஜபக்ஷவின் தெரிவு தொடர்பில் சர்வதேச சமூகம் நிலைமைகளை அவதானித்துக் கொண்டிருக்கிறது. இப்போது இது விடயத்தில் இப்போது நாம் கருத்து தெரிவிப்பது சரியல்ல'' என்று ஊடகம் ஒன்றுக்கு கூறியுள்ளார்.

தமிழ்த்தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் மாவை சேனாதிராஜாவும் இது தொடர்பில் கருத்து தெரிவிக்க மறுத்துள்ளார்.

மஹிந்தவின் தெரிவுக்கான தமிழர்களினது கருத்தை எதிர்வரும் 27ஆம் திகதியன்று தமிழீழ தேசியத்தலைவர் வேலுப்பிள்ளை பிரபாகரன் தனது நாட்டு மக்களுக்கான வருடாந்த உரையில் தெரிவிப்பார் என்று சர்வதேச சமூகம் எதிர்பார்க்கிறது. சிங்களவர்களும் அந்த உரைக்குக் காத்திருக்கிறார்கள்.

இந்தியாவிலிருந்து வெளியாகும் டெக்கான் ஹெரால்டு என்ற நாளேடு, மஹிந்தவை இந்தியாவுடனான வலுவான உறவுகளை விரும்புபவர் என்று வரவேற்று எழுதியுள்ளது.

தமக்கென தனியான அரசியல் ஆளுமை இல்லாத 'நிழல்' பிரதமராக இருந்து நிழல் ஜனாதிபதியாகத் தெரிவு செய்யப்பட்டுள்ள மஹிந்த ராஜபக்ஷ 50 ஆண்டுகளுக்கு முன்பே நிராகரிக்கப்பட்ட கோட்பாடுகளை இனப்பிரச்சினையில் கையாள்வது என்பது அபாயகரமானது என்பதை அரசியல் நோக்கர்கள் தொடர்ந்து கூறிவருவது குறிப்பிடத்தக்கது.

இலங்கை இனப்பிரச்சினைக்குத் தீர்வுகாண இலங்கை அரசாங்கத்துக்கு சர்வதேச சமூகம் அளித்திருந்த அனைத்து வாய்ப்புகளையும் ஒட்டுமொத்தமாக நிராகரித்தது கடும்போக்காளர்களைக் கொண்ட அரசாங்கம். அதே கடும்போக்காளர்களின் கைப்பிடித்து ஒருவர் ஜனாதிபதியாகத் தெரிவாகி உள்ளார்.

தமிழர்களால் 50 ஆண்டுகளுக்கு முன்பே நிராகரிக்கப்பட்ட ஒற்றையாட்சி கோரிக்கையை தூக்கிப் பிடிக்கின்ற இந்தியத் தலையீட்டின் கடந்த கால அனுபவங்களை நிராகரித்துவிட்டு சர்வதேச சமூகத்தின் நிகழ் காலத் தலையீட்டையும் நிராகரித்துவிட்டு 20 ஆண்டுகளுக்கு முந்தைய சூழலை மீண்டும் உரு வாக்க எண்ணுகின்ற தமது போராளிகளும், தளபதிகளும், பொதுமக்களும் படுகொலை செய்யப்பட்ட நிலையிலும் யுத்தத்தைத் தொடங்காத தமிழீழ விடுதலைப் புலிகளைச் சீண்டும் வகையில் யுத்தநிறுத்த ஒப்பந்தத்தை முறிக்கின்ற வகையில் பேசிவருகின்ற இனப்பிரச்சினை தீர்வுக்கான விடயங்களில் 'பிற் போக்காளராக' சித்தரிக்கப்படுகின்ற மஹிந்தவின் செயற்பாடுகள் பல நூறு கேள்விகளை எழுப்பியுள்ளது.

சிங்களத் தேசத்தின் எதிர்காலம் இந்த கேள்விகளில் முதன்மையானது என்பதே அரசியல் நோக்கர்களின் வெளிப்படையான கருத்து ஆக இனவாத, மதவாத கோட்பாட்டாளர்களின் பிரதிநிதியாக, சிங்களத் தீவிரவாதிகளின் 'நிழல்' ஜனாதிபதியாகத் தெரிவு செய்யப்பட்டிருக்கும். ஒரு வலதுசாரித்தனமான மஹிந்த ராஜபக்ஷவினால் இலங்கையின் பொருளாதாரம், இலங்கை இனப்பிரச்சினை அது தொடர்பிலான யுத்த நிறுத்த ஒப்பந்தம் என எல்லா பிரதான பிரச்சினைகளுமே கேள்விக்குறியாகி இருக்கின்றன.

எவ்வாறு 1956க்குப் பிறகு இந்தத் தீவு பண்டாரநாயக்கவினால் இரத்தத்திலே குளிப்பதற்குச் செய்யப்பட்டதோ, அதுபோல் இந்தத் தீவில் சிங்களத் தீவானது இரத்தத்தில் குளிப்பதற்கும்

தமிழ்த் தீவு விடுதலைப் பெறுவதற்குமான வழியை எவரது தேர்வானது கொடுக்கும் என்று விடுதலைப்புலிகளின் முக்கிய உறுப்பினர் க.வே.பாலகுமாரன் எச்சரித்திருந்தாரோ அந்த மஹிந்த ராஜபக்ஷவினது தெரிவுதான் இப்போது சிறிலங்காவிலே நடந்தேறியுள்ளது.

காலமும் நீதியும் காத்திருக்கிறது... நியாயங்களை மெய்ப்பிக்க. □

# நாட்டை மீளக் கட்டியெழுப்ப மஹிந்தவுடன் இணையுமாறு மு.கா, இ.தொ.காவுக்கு அழைப்பு

(கொழும்பு)

நாட்டைக் கட்டியெழுப்பி புதிய இலங்கையைக் காண்பதற்காக அரசியல் பேதங்களை மறந்து ஒத்துழைக்குமாறு ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ விடுத்த வேண்டுகோளை சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸும், இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸும் ஏற்று ஜனாதிபதி மஹிந்தராஜபக்ஷவுடன் ஒன்றிணைய வேண்டுமென கிழக்கு மக்கள் ஜனநாயக முன்னணி கேட்டுள்ளது.

அக்கட்சி இது தொடர்பாக விடுத்துள்ள அறிக்கையில்,

இலங்கையின் அரசியல் அமைப்பின் மூலம் ஜனாதிபதிக்கு வழங்கப்பட்டுள்ள நிறைவேற்று அதிகாரத்தைப் பயன்படுத்தாமல் தான் ஒரு மக்கள் சேவகனாக நடக்கவிருப்பதாக ஜனாதிபதி தெரிவித்துள்ள்ளார்.

ஜனாதிபதி மாளிகை மக்களுக்காக எந்நேரமும் திறந்திருக்குமென பதவியேற்பு வைபவத்தின்போது மஹிந்தராஜபக்ஷ தெரிவித்தமையானது, அவர் ஒரு இன மத பேதமற்ற எளிய மக்களின் தலைவராக இருக்கிறார் என்பதை உறுதிப்படுத்தக் கூடியதாக இருக்கின்றது.

இத்தகைய ஒரு எளிமையான தலைவரின் ஆட்சியில் இனப்பிரச்சினை அனைத்தையும் தீர்த்துவைக்கப்படுமென்று மக்கள் நம்புகிறார்கள்.

ஜனாதிபதி மஹிந்தவை ஒரு இனவாதியாகக் காட்டுவதற்கு எடுக்கப்பட்ட முயற்சிகள் யாவும் மக்களால் நிராகரிக்கப்பட்டுள்ளன.

அடக்கி ஒடுக்கப்பட்ட மக்களின் தோழரான மஹிந்தவுடன் கைகோர்த்து செயற்பட்டு தோட்டத்தொழிலாளர்களுக்கும், முஸ்லிம்களுக்கும் கிடைக்கவேண்டிய உரிமைகளை பெற்றுக் கொள்ள அவருடன் ஒத்துழைக்குக என்று குறிப்பிடப்பட்டுள்ளது. (ற-9)

# சட்டவிரோத மின்பாவனை

(காரைநகர்)

சட்டவிரோத மின்பாவனைகள் அதிகரித்துள்ளதால் காரைநகரின் பல பகுதிகளிற்கு வலுக்குறைந்த மின்சாரம் கிடைக்கின்றது. இதனால் இரவு வேளைகளில் மாணவர்கள் கல்வி கற்க முடியாத நிலை தோன்றியுள்ளது.

இது தொடர்பாக மேலும் அறிய வருவதாவது காரைநகர் மாப்பாண ஊரி, வேதரடைப்பு மற்றும் தங்கோடை, கள்ளித்தெரு, கருங்காலி, களபூமி, தோப்புக்காடு ஆகிய பகுதிகளில் சட்டவிரோதமாக மின்சாரம் பெற்றுவருகின்றனர்.

இவ்வாறு சட்டவிரோதமாக மின்சாரம் பெறுபவர்கள் இரவு வேளைகளிலேயே தமது மின் இணைப்பை ஏற்படுத்துவதனால் அவ்வேளை மின்சாரம் வலுக்குறைந்து செல்கின்றது.

அதேநேரம் மின்சாரக் கம்பிகளும் ஒன்றுடன் ஒன்று உரசுப்பட்டு மின்சாரம் தடைப்படுகின்றது.

சில பகுதிகளில் சட்டவிரோதமாக மின் இணைப்பை ஏற்படுத்துபவர்கள் சுமார் அரைக்கிலோமீற்றருக்கும் அதிகமான தூரம் மின் இணைப்பை ஏற்படுத்தி பல வீடுகளிற்கு விநியோகிக்கின்றனர். இதனால் பல உயிரிழப்புகள் ஏற்பட சந்தர்ப்பம் உள்ளது.

மேற்படி சம்பவங்கள் தொடர்பாக மின்சாரசபை பிராந்திய அலுவலகத்திற்கு பொதுமக்களால் தொலைபேசி மூலம் அறிவித்தும் எந்தவித நடவடிக்கைகளும் எடுக்க முன்வராததையிட்டு மின்பாவனையாளர்கள் விசனம் தெரிவித்துள்ளனர். (த-246)

# இன்றைய சிறுவர்கள் நாளைய தலைவர்கள்

## பாலியல் துஷ்பிரயோகமும் சிறுவர் உரிமைகளும்

கமலா ஒரு போதுமே நினைத்திருக்கவில்லை அவர் அப்படிச்செய்வார் என. படிக்க ஆர்வம் உள்ள கமலாவுக்கு வீட்டில் ஆதரவென்று சொல்ல ஒருவருமில்லை. அப்பாவும் அம்மாவும் காசு உழைப்பதே முதற்பணி என்று இயங்கிக்கொண்டிருப்பவர்கள். சகோதரர்கள் எல்லோரும் இளையவர்கள். வீட்டில் சாப்பாடும் காசும் தவிர வேறெதுவும் கிடைப்பதாய் உணரவில்லை. கமலா பரீட்சையில் அதிகமார்க் பெற்று பாராட்டு கிடைக்குமென்ற எதிர்பார்ப்புடன் வந்தவளுக்கு 'ஓ...ஓ புளுகிக் கொண்டிராம புத்தகங்களை எடுத்துக் கொண்டு ரியூசனுக்கு ஓடு பாப்பம்' என்ற அம்மாவின் எரிச்சல் கலந்த வார்த்தைகளே கிடைத்தது.

இப்படி பல பல எதிர்பார்ப்புக்கள் வெறுமையுடன் கழிய மனதுக்குள் நொருங்கி கன தரம் ஆழுததாக தன் கடந்த காலத்தை நினைவு கூர்ந்தாள் கமலா.

இப்படி இருக்கும்போது தான் ஒரு நாள் கமலா வீட்டாரின் தூரத்து உறவானவர் 40 வயதிற்கு மேலிருக்கும், வீட்டில் கமலாவின் கையெழுத்தை



கொப்பிகளில் பார்த்துவிட்டு 'நன்றாக இருக்கிறது'. உன்னை போலவே எழுத்தும் வடிவாக இருக்கிறது என பாராட்டினார். வரண்டு வெடித்துப் போயிருந்த மனதுக்கு மழைபெய்தது போலிருந்தது அந்த வார்த்தைகள். அவர் அப்படிப் பாராட்டுவது நன்றாக இருந்தது. அவளுக்கு. வீடு வந்து போகும் போதெல்லாம் ஏதாவது பாராட்டி பேசிக் கொண்டே இருப்பார்.

மிக சாதரணமாகப் பேசிப் பழகும் அவரில் எந்தவித தப்பவிப்பிராயமும் ஏற்படவில்லை. கமலாவுக்கு, அவரை கண்டால் சந்தோசம்.மாலை நேரத்தில் படிப்புகள் தொடர்பாய் சந்தேகம் கேட்பாள், தாராளமாகச் சொல்லிக் கொடுப்பார். கமலாவின் பெற்றோரும் இதில் எந்தவித வேறுபாட்டையும் காணவில்லை.

ஆனால் நாட்கள் போகப் போக தொட்டு செல்லமாக அடித்து பழகத் தொடங்கினார், அதிலும் எவ்வித அசௌகாரியத்தையும் பெறவில்லை கமலா. பின்னர் பாலியல் சார் கதைகள், சம்பவங்கள், தன் இளமைக் காலம் பற்றி தொடர்பில்லாமல் கதைக்கும்போது தான் கமலாவுக்கு அசௌகரியமாக இருந்தது. ஆனால் அதை வெளிப்படுத்தாமல் பார்த்துக்கொண்டாள். ஒருமுறை தனது உடம்பில் அசௌகரியத்தை ஏற்படுத்துமாறு தொட்டபோது தான் கமலா முதல் முதல் பயப்பட்டாள். ஆனாலும் மரியாதையின் பெயரில் பேசாமல் இருந்துவிட்டாள். வீட்டில் சொல்லவும் ஏலாமல் இருந்தது. இதை எப்படி யாரிடம் சொல்வதென புரியவில்லை அவளுக்கு. ஒருமுறை ஆட்களற்ற நேரத்தில் வீட்டிற்கு வந்த மேற்படி உறவினர் வழமைபோல் அதீதமாய் பாராட்டினார். படிப்புப் பற்றி கேட்டு விட்டு, தன் மீது விருப்பம் இருக்க என கேட்க பதிலேதும் கூறமுடியாதவாறு மலைத்துப் போய் நின்ற கமலாவை திடீரென அணைத்து முத்தமிட அவரை தள்ளிவிட்டு வெளியே ஓடியவளுக்கு ஒரே அதிர்ச்சியாக இருந்தது. ஒரு வருடனும் கதைக்க முடியவில்லை, சாப்பிட முடியவில்லை, திடீர் திடீர் என கனவு கண்டு அழுவாள். பாடசாலையிலும் அசாதாரணமாக நடந்து கொள்வாள்.

இவற்றை அவதானித்த ஒரு ஆசிரியை கமலாவுடன் தனிமையில் கதைத்துக், கதைத்து ஐந்தாவது தடைவை கதைக்கும் போது தான் கமலா மேற்படி சம்பவத்தை கூறிவிட்டு அழத் தெடங்கினாள். பின்னர் கமலா முறையான ஒரு உளவளத் துணையாளரிடம் அனுப்பப்பட்டு பல சந்திப்புக்களின் பின் கமலாவின் பெற்றோர்களும் அழைக்கப்பட்டு கமலாவிற்கு தேவையாகவுள்ள அன்பு, அரவணைப்பு, பாசம் என்பவற்றை விளக்கி அது உங்களிடமிருந்து கிடைக்காததாலும் அவள் தன் பிரச்சினைகளை ஆரம்ப கட்டத்திலேயே உங்களிடம் சொல்லக்கூடிய உறவை நீங்கள் அவளிடம் ஏற்படுத்தவும் இல்லை என உணர்த்தப்பட்டது. தங்கள் பிள்ளை சந்திக்க இருந்த பாரிய பிரச்சினையை புரிந்து கொண்ட பெற்றோர் தாங்கள் இனி கவனமாக இருப்பதாக உறுதி அளித்து அவ்வாறே வாறே நடக்கலாயினர். இதற்கு கமலா தான் காரணமா?

### *பிள்ளைகள் ஏன் பாலியல் துஷ்பிரயோகத்திற்கு உள்ளாகின்றனர்?*

பாலியல் ரீதியான தவறான வழி நடத்தல்கட்கும், துன்புறுத்தல்களுக்கும் பிள்ளைகளை காரணம் சொல்ல முடியாது. பிள்ளைகளது சம்மதத்துடன் மேற்படி பிரச்சினைகள் நடந்தாலும் கூட கமலா போன்ற பிள்ளைகள் பெரியவர்களது தப்பினாலேயே தங்களை தவற விடுகின்றனர் பிள்ளைகளை இவ்வாறான ஆபத்திலிருந்து காப்பாற்ற பெரியவர்கள் என்ன செய்யலாம்?

**(1) பிள்ளைகளின் தேவைகளைப் புரிந்து கொள்ளலும், அவை அவர்களுக்கு கிடைக்க வழி செய்தலும்**

தேவைகள் எல்லோருக்குமே பொதுவானவை. அடிப்படைத் தேவை, அன்பு அரவணைப்பு, பாதுகாப்பு என்பன பிள்ளைகளை பொறுத்தவரை முக்கியமானவை. தாம் மதிப்பு வைத்துள்ள பெற்றோர் தம்மை அன்பு செய்ய வேண்டும் என்றே எல்லாப் பிள்ளைகளும் விரும்புவர். பல பெற்றோர் உண்மையில் தங்கள் பிள்ளைகளிடம் மிகுந்த அன்பு வைத்திருப்பர். ஆனால் அவர்களது ஆளமான அன்பு பற்றி பிள்ளைகளுக்கு தெரிய மாட்டாது ''அன்பை வெளிப்படுத்திக் காட்டும் போதே பிள்ளைகளால் புரிந்துகொள்ள கூடியதாக உள்ளது''.

### *அன்பை எப்படி வெளிப்படுத்தி காட்டுவது??*

உரிய நேரத்தில் வழங்கும் பாராட்டுக்கள், அருகிலிருத்தல் சிறிய சிறிய பரிசுகள் (பெறுமதி கூடியதென்று பொருளல்ல) கொடுத்தல், சேர்ந்து கதைத்தல், விளையாடல், தட்டிக் கொடுத்தல், தோல்விகளை தாங்க உதவுதல்.... இன்னும் எப்படி எப்படி வெளிக்காட்ட முடியுமோ அப்படி எல்லாம்.

இங்கு ஒன்று மட்டும் முக்கியம். அன்பு வைக்கின்றோம் என்று அதீத செல்லம் கொடுத்தும், பிள்ளைகளை ஒரு செயற்பாடுகளிலும் பங்கு பற்ற அனுமதிக்காது கவனம் பார்க்கும் பெற்றோரும் பிள்ளைகளை சடப்பொருட்களாக்கி விடுகின்றனர். இதன்மூலம் அவர்களின் ஆளுமை வளர்ச்சி நடைபெற முடியாமல் போய் விடுவதுடன், பிரச்சினைகட்கு முகங்கொடுக்கும் தன்மையையும் உடைத்து விடும்.

பிள்ளைகள் ஆரோக்கியமாக வளர்வதற்கான அடிப்படைத் தேவைகளை வழங்குவதுடன் அவர்கள் பாதுகாப்புணர்வுடன் வளரவும் பெற்றோர் உதவ வேண்டும்.

**(2) சிறந்த உறவை தகுந்த முறையில் பேணல்**

பிள்ளைகள் தாங்கள் எதிர்நோக்கும் எந்தப் பிரச்சினைகளையும் கதைப்பதற்கும், முறையிடுவதற்குமுரிய உறவை பெற்றோர் பேண வேண்டும். பிள்ளைகள் தம்மீது மதிப்பாக இருக்க வேண்டும். என்றஎதிர்பார்ப்பு சரியானது. ஆனால் பயமாக இருக்க வேண்டும் என எண்ணுவது சிறந்தஉறவை பேண தடுக்கும் ஒன்றாகும்.

**(3) பிள்ளைகளது உணர்வுகளை ,புரிந்து கொள்ளல்**

உணர்வுகள் எல்லோருக்குமே உண்டு மகிழச்சி, கோபம், பயம், கவலை, குற்ற உணர்வு, பாலுணர்வு, ஆத்திரம், சோகம் எல்லாமே உணர்வுகள் தான். சில நேரானவை. சில மறையானவை. அடிக்கடி பிள்ளைகளின் உணர்வுகளில் மாற்றம் ஏற்படலாம். அவற்றை வெளிப் படுத்துவதில் அவர்கள் பல்வேறு பிரச் சினைகளை எதிர்நோக்கலாம். எனவே உணர்வுகள் குறித்து பிள்ளைகளுடன் பேசுவதும், அவற்றை வெளிப்படுத்த உதவுதலும் அனேக பிரச்சினைகட்கு தீர்வு தரும்.

**(4) பாலியல் கல்வி**

வயது விருத்தியில் உடல், உள நடத்தை மாற்றங்கள் சகஜம், பாலுணர்வும் ஆர்வமும் குறிப்பிட்ட வயதில் நிகழும் ஒன்று. எனவே அது பற்றி சரியான தகவல்களை அறிந்து கொள்ள பிள்ளைகட்கு உதவுதல் அவசியம் இது பற்றி கதைப்பதற்கு பெரியவர்களுக்கு சரியான அறிவு இருப்பது முக்கியம். எதிர்காலத்தில் எவ்வாறான பாலியல் சார் பிரச்சினைகள் வரலாம் என முன்னெச்சரிக்கை செய்யலாம்.

**(5) வழிகாட்டலும் அவதானிப்பும்**

பிள்ளைகளை அசௌகரியப் படுத்தாத வகையில் அவர்களை அவதானித்து வழிநடத்த வேண்டிய பொறுப்பு பெற்றோரையும் ஆசிரியரையும் சேரும் பிள்ளைகளுடன் அளவுக்கதிகமாக பழகுவோர், சக நண்பர்கள் எல்லோரையும் அவதானியுங்கள் ஆனால் சந்தேகிக்காதீர்கள். அனேக பாலியல் துஷ்பிரயோகங்கள் உறவினர், மற்றும் மூத்த வயது நண்பர்களால் நடைபெற்றிருப்பதால் தான் இதை சொல்ல வேண்டியுள்ளது.

**(6) பிள்ளைகளின் கருத்துக்களை, எதிர்பார்ப்புக்களை சுதந்திரமாக வெளிப்படுத்தும் சூழலை ஏற்படுத்தல்**

இவ்வாறான பிரச்சினைகளின் போது பிள்ளைகள் தம் பிரச்சினைகளை வெளிப்படுத்துவதில் தான் தயக்கம் காட்டியவர்களாக இருந்துள்ளனர். தம்மை குறைகண்டு விடுவார்கள், பெரியவர்கள் பேசுவார்கள் என்ற பயத்தினால் அவர்கள் பிரச்சினைகளுடன் வாழ நிர்பந்திக்கப்படுகின்றனர்.

**(7) பிள்ளைகளின் நடத்தை செயற்பாடு சிந்தனை பற்றி அறிதல்**

பிள்ளைகளின் மேற்படி விடயங்

**ரீ.ரீ.மயூரன்**

கள் பற்றி அறியவும் அவர்களில் ஏதாவது அசாதாரண மாற்றங்கள் ஏற்படுகின்றனவா எனவும் அறிதல் முக்கியம். அது நேரடியானதாக இருக்கலாம். அத்துடன் பிள்ளைகளுடன் தொடர்பில் உள்ள ஆசிரியர், நண்பர்களிடம் கேட்பதன் மூலம் அறியலாம். பல சமயங்களில் வீட்டில் சாதாரணம் போல் உள்ள பிள்ளைகள் பாடசாலையில் மிக அசாதாரணமாக நடந்து கொள்கின்றனர் என ஆசிரியர்கள் கூறியுள்ளனர்.

### *சிறுவர் உரிமைகள் சாசனமும் பாலியல் துஷ்பிரயோகமும்*

சிறுவர் உரிமைகள் சாசனத்தின் 34ஆவது உறுப்புரிமை "ஒவ்வொரு பிள்ளையும் விபச்சாரம் மற்றும் ஆபாசக் காட்சிகள் ஆகியன அடங்கலான பாலியல் தூண்டல்கள், இம்சைகள் முதலியவற்றிலிருந்து பாதுகாப்பு பெறும் உரிமை உடையவர்கள்" என கூறுகிறது பாலியல் துஷ்பிரயோகத்துடன் தொடர்புடைய நேரடியான உறுப்புரையாக இது காணப்படுவதுடன் நேரடியாக தொடர்பு படாத பல உரிமைகள் இச் சமவாயத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது.

**அன்பார்ந்த மாணவர்களே!**

உங்கள் வலம்புரியில் திங்கட்கிழமை தோறும் வெளிவரும் 'இன்றைய சிறுவர்கள் நாளைய தலைவர்கள்' பகுதியை தவறாது வாசியுங்கள். வெகுமதியான பரிசில்களுடன் உங்களுக்கான போட்டிகள் காத்திருக்கின்றன.

சிறுவர் பாதுகாப்பு இலங்கை
யாழ்ப்பாணம்

# இன்றைய சிறுவர்கள் நாளைய தலைவர்கள்

## மார்க்கோனி



(Marconi, 1874–1937): இவர் இத்தாலிய விஞ்ஞானி. இத்தாலியிலுள்ள பொலோனா (Bologna) என்னுமிடத்தில் பிறந்தார். இவர் எந்தப் பல்கலைக் கழகத்திலும் சேர்ந்து கல்வி கற்கவில்லை. ஆசிரியர்கள் வீட்டிற்கு வந்தே இவருக்குக் கல்வி கற்பித்தனர். வீட்டு மாடியிலேயே ஆராய்ச்சிகளைச் செய்து வந்தார். ரேடியோவிற்கு அடிப்படையான கம்பியில்லாத் தந்தியை (Wireless Telegraphy) அமைத்தவர் இவர்.



மார்க்கோனி சிறுவனாக இருக்கும்போதே வீட்டு மாடியில் ஆராய்ச்சி செய்தல்.

1894இல்மின்அலைகள் மூலமாகச் செய்கைக் குறிகளை (Signals) அனுப்பிக் காட்டினார். பௌதிகத்திற்கு நோபல்பரிசை 1909 இல் இவ ரும் 'பர்டினாண்டு பிரான்' (Ferdinand Braun) என்பவரும் பெற்றனர்.

1912இல் மோட்டார் விபத்து காரணமாக வலது கண்ணை இழந்தார். இருப்பினும் முதல் உலகயுத்தத்தில் சேர்ந்து இத்தாலிய கம்பியில்லாத் தந்திப் படைக்குத் தலைவரானார்.

1919இல் பாரிஸில் சுவடிய சமாதான மாநாட்டிற்கு இத்தாலியப் பிரதிநிதியாகச் சென்றார்.

## அறிந்துகொள்ளுங்களேன்...

### வண்ணத்துப் பூச்சிகள் சண்டையிடுமா?

வண்ணத்துப் பூச்சிகளுக்குத் தாடைகளோ, கடிப்பதற்குரிய பகுதிகளோ கிடையாது. அவற்றின்வாயில் 'புரோபோஸ்சிஸ்' என்னும் நீண்ட குழல் உள்ளது. இது உறிஞ்சு குழல் ஆகும். இதன் வாயிலாகத் தான் வண்ணத்துப்பூச்சிகள் தங்களுக்குத் தேவையான உணவினை எடுத்துக்கொள்கிறது. அதனால் வண்ணத்துப் பூச்சிகளுக்கு சண்டையிடுவதற்குரிய எந்த அம்சமும் கிடையாது.

ஆனால் சில வகை வண்ணத்துப் பூச்சிகள் சண்டையிடும் குணாதிசயம்கொண்டவை. தங்களது எல்லைப் பகுதிகளுக்கு வேறு எல்லைக்குள் வசிக்கும் வண்ணத்துப் பூச்சிகள் வந்து விட்டால் 'அவ்வளவு தான். அத்துமீறி நுழைந்த வண்ணத்துப் பூச்சியை கூட்டத்தின் தலைவன் போல் உள்ள ஆண் வண்ணத்துப் பூச்சி வட்டமிட்டு வந்து ஆக்ரோஷமாகத் தாக்கும். அப்போது ஒன்றோடு ஒன்று மோதிக்கொண்டு தங்களது இறகுகளால் பலமாக அடித்துக்கொள்ளவும் செய்யும்.



சில வண்ணத்துப் பூச்சிகள் தங்களது எல்லையை விட்டு மற்ற வண்ணத்துப் பூச்சிகளை விரட்டியடிக்கும் போது 'கிளிக்' என்ற சத்தத்தையும் எழுப்பும்.

சிறுவர் பாதுகாப்பு இலங்கை
யாழ்ப்பாணம்

## தாய் சொல்லைத் தட்டாதே!




அது ஒரு அடர்ந்த காடு. காட்டில் பலமிருகங்கள் வாழ்ந்து வந்தன. அந்தக் காட்டை சிங்கம் ஒன்று ஆண்டு வந்தது.

ராஜா சிங்கத்திற்கு ஒரு குட்டி சிங்கம் இருந்தது. அதன் பெயர் இளவரசன். அவன் கொஞ்சம் மந்தப் புத்தி உடையது. இயற்கைக்கு மாறான சில காரியங்களைச் செய்வதில் அவன் கெட்டிக்காரன். இதை தாய் அடிக்கடி கண்டிக்கும். தாய் சிங்கம் கண்டிப்பதை இளவரசன் கேட்பதே இல்லை.

ஒருநாள், அம்மா சிங்கமும், மகன் இளவரசன் குட்டியும்– வேட்டைக்காகப் புறப்பட்டு சென்று கொண்டிருந்தனர்.

அப்போது இளவரசனின் காதில் ஒரு காட்டு எருமையின் சத்தம் கேட்டது. உடனே இளவரசன் காட்டு எருமை போல் சத்தம் போட்டான். இதைக் கேட்ட தாய் சிங்கம்,

''டேய் இளவரசா, இயற்கைக்கு மாறாக நாம் நடந்து கொள்ளக்கூடாது. அது நமக்கு



ஆபத்தை உண்டாக்கி, நம்மையே அழித்துவிடும். எனவே நமது தாய்மொழி என்று ஒன்று இருக்கிறதல்லவா அதிலேயே நாம் பேசி வந்தால் நமக்கு ஆபத்து இருக்காது'' என தாய் சிங்கம் கூற...

''போம்மா... நீயும் உன் உபதேசமும். நான் இந்த வித்தியாசமான சத்தத்தில் ஒரு சாதனை படைக்கப் போகிறேன். நீ என்னைத் திசை திருப்பாதே'' என இளவரசன் தன் தாயிடம் சண்டை போட்டுச் சென்றது.

ஒருநாள், இளவரசன் காட்டு வழியே போய்க்கொண்டிருந்தது. ஏதாவது மிருகம் சத்தம் போடுமா, அதைப் போல் நாமும் சத்தம் போட்டு, பயிற்சி எடுக்கலாமே என நினைத்துக் கொண்டே காட்டுப்பாதை வழியே போய்க் கொண்டே இருந்தது.

அப்போது, தூரத்தில் ஒரு ஆண் மானின் சத்தம் இளவரசனின் காதிற்கு கேட்டது. உடனே இளவரசன் சிங்கத்திற்கு குஷி வந்து விட்டது.

ஆண் மானின் சத்தத்தை உன்னிப்பாகக் கேட்ட இளவரசன் – ஆண் மானைப் போலக் கத்தியது. அப்படி மானைப் போல் கத்திக்கொண்டே சென்றது இள வரசன்.

தூரத்தில் ஒரு ஆண் மானின் சத்தம் கேட்பதைக் கவனித்த வேடன் மகிழ்ச்சி அடைந்தான். அந்த வேடன் சத்தம்வரும்திசையைப்பார்த்து கண்களையும் காதையும் கூர்மையாக்கினான்.

இளவரசன் மகிழ்ச்சியோடு மானைப் போல் அருமையாகக் கத்திக்கொண்டே சென்றான்.

வேடன் மானின் சத்தம் வரும் திசையில் வில்லைத் திருப்பி அம்மை ஏற்றிக் குறி பார்த்தான். இளவரசனும் மானைப் போல் சத்தம் போட்டுக்கொண்டே சென்றான்.

வேடன் மானின் சத்தம் வரும் பக்கம் பார்த்து அம்பைச் செலுத்தினான். அம்பு நேராக இளவரசன் சிங்கத்தின் கழுத்தில் போய் தைத்தது. இளவரசனின் கதை முடியப் போகும் போது, தாய் சிங்கம் சொன்ன அறிவுரை மனதில் ஓடியது.

''மகனே! அவரவருக்கு தாய்மொழி என்று ஒன்று இருக்கிறது. அந்த மொழியைத் தவிர வேறு மொழியில் நாம் சத்தம் போடக் கூடாது. அப்படி வேறு மொழியில் சத்தம் போட்டால் நம் உயிருக்கு ஆபத்து தான்'' என தாயின் அறிவுரையை அசை போட்டுக்கொண்டே உயிரை விட்டது குட்டி சிங்கம்.

கல்வியின் பயன் எதையும் கோபப்படாமலும், தன்னம்பிக்கையை இழக்காமலும் செவிசாய்க்கும் திறன்.
– ராபர்ட் பிராஸ்ட்


கட்டாயப்படுத்தி புகுத்தப்படும் அறிவு மனதில் பதியாது.
– பிளேட்டோ

நீ பேசும் வார்த்தைகளின் மீது உனக்குள் கட்டுப்பாடு இருக்கவேண்டும்.
– அரவிந்தர்

## கண்டுபிடியுங்கள்

அன்புக் குழந்தைகளே!

கீழேயுள்ள இரண்டு படங்களுக்குமிடையே குறைந்த பட்சம் 7 வித்தியாசங்கள் உள்ளன. அவற்றைக் கண்டுபிடியுங்கள் பார்க்கலாம்?



# தென்னை உற்பத்தியாளர்கள் ஒன்றிணைந்து செயற்படின் எத்தனையோ முன்னேற்றங்களை காண முடியும்




9 அங்குலம் நீளமான 4 அல்லது 5 சீமைக் கிழுவைத் தடிகளைக் கொண்டு அடுப்பு மூட்டி 3 மணி நேரத்தில் ஒன்றரைக் கிலோ அரிசியும், 2 கறியும் சமைத்து முடிக்கலாம். இவ்வாறு அண்மையில் தென்மராட்சி ப்ரதேச செயலகத்தில் நடந்த தென்னைப் பயிர்ச்செய்கையாளருக்கு மானியம் வழங்கும் நிகழ்வில் தென்னைப் பயிர்ச்செய்கைச் சபையின் வடபிராந்திய முகாமையாளர் க.தேய்வேந்திரன் கூறியுள்ளார்.

அவர் மேலும் கூறுகையில்,

5 அங்கத்துவர்களைக் கொண்ட குடும்பத்துக்கு ஒரு வருடத்துக்கு 650 தேங்காய்கள் தேவை. இவற்றிக்கு 10 ஆயிரம் ரூபா தேவை. 1 மாத சம்பளம் இதற்குச் செலவாகிறது.

யாழ்.மாவட்ட விவசாயிகள் உலகப் புகழ் பெற்றவர்கள். தெங்குப் பயிர்ச் செய்கையின் போதும், வீட்டுத் தோட்டத்தின் போதும் இறைப்புச் செய்பவர்கள் இவர்கள்தான். பசளையாக எரு, இயற்கை உரத்தைப் பாவிப்பவர்களும் இவர்கள்தான்.

தென் மாகாண மக்கள் இப்போது தான் இவற்றைப் பயன்படுத்த தொடங்கியுள்ளார்கள்.

ஆரம்பத்தில் இவர்களுக்கு உரம் மட்டுமே மானியமாக வழங்கப்பட்டது. 84ஆம் ஆண்டின் பின்னர் நாட்டில் ஏற்பட்ட யுத்தம் காரணமாகவும் அரசின் கொள்கை வேறுபாடு காரணமாகவும் 2003ஆம் ஆண்டு வரை எவ்வித மானியமும் வழங்கப்படவில்லை.

98,99ஆம் ஆண்டு வரை அரசின் திறைசேரியே இதற்குரிய பணத்தை வழங்கியது. பின்னர் அது நிறுத்தப்பட்டு பெருந்தோட்டப் பொருட்கள் ஏற்றுமதி செய்யப்படும் போது அதற்குரிய வரிப்பணம் அறவிடப்பட்டு அப்பணமே மானியமாக வழங்கப்பட்டது.

கடந்த 98ஆம் ஆண்டில் தேயிலை ஏற்றுமதியின் போது 4 ஆயிரம் மில்லியனும், இறப்பர் ஏற்றுமதியின் போது 2ஆயிரம் மில்லியனும் ஏற்றுமதி வரியாகக் கிடைத்தது.

ஆனால் தெங்குப் பொருட்கள் ஏற்றுமதியின் போது கிடைத்த வரி வருவாய் 400 மில்லியன் ரூபாய் ஆகும்.

கடந்த 4,5 வருடமாக அரசின ஊக்குவிப்பு மானியம் எதுவும் இல்லாததினால் ஒரு ஏக்கரில் உள்ள தென்னையில் இருந்து 1 நாளின சராசரி வருமானம் 163 ஆக கிடைத்தது. இது போதுமா?

அச்சுவேலி நாற்று மேடையில் 81 ஆயிரம் நாற்றுக்கள் போடட்டுள்ளோம். அதில் 60 ஆயிரத்தையே சிறந்த கன்றுகளாகத் தேர்ந்தெடுக்கலாம். அதை யாழ் மாவட்ட மக்களுக்கு விநியோகிக்க உள்ளோம்.

கிளிநொச்சியிலும் 30 ஆயிரம் நாற்றுக்கள் போடப்பட்டுள்ளன. அதில் சிறந்ததாக 27 ஆயிரம் தென்னம் கன்றுகளை தேர்ந்தெடுக்கலாம். அதை வன்னிப பெருநிலப்பரப்பு விவசாயிகளுககு வழங்க உள்ளோம.



அரை ஏக்கருக்கும் 5 ஏக்கருக்கும் இடைப்பட்ட அளவுள்ள காணிகளில் தென்னைப் பயிர்ச்செய்கை செய்பவர்களுக்கு நாம் மானியமாக தென்னை நாற்றுகளும் உரமும் வழங்குவோம்.

விருப்பமுள்ளவர் கள் எம்மிடம் உளள விண் ணப்பப் படிவத்தை பெற்று பூர்த்தி செய்து கொடுத்தால் அதை சிபார்சு செய்து நாம் இவற்றை வழங்கத் தயாராக உள்ளோம்.

இந்த வருடம் 1050 ஏக்கரில் தென்னந் தோட்டம் உருவாக்க இருக்கிறோம். இதனை உங்கள் ஒவ்வொருவரின் ஒத்துழைப்புடனும் தென்னைப் பயிர்ச்செய்கை சபையின் ஆதரவுடனும் நிறைவேற்றுவோம்.

எமது தென்னைப் பயிர்ச்செய்கையின் தலைவர் டாக். ஜயந்த குணதிலக (ஆராய்ச்சியாளர்), மேலதிக முகாமையாளர் மற்றும் தென்னைப் பயிர்ச்செய்கை ஆராய்ச்சியாளர்கள், அதிகாரிகள் கொண்ட குழுவொன்று வட பகுதிக்கு விஜயமொன்றை மேற்கொண்டபோது எமது தென்னை வளம் முற்றாக சேதமடைந் திருந்ததைக் கண்டு திகைப்புற்றனர். எமது தென்னை மரங்களில் இவ்வளவு காய்கள் தொகையாக காய்த்து இருப்பதைக் கண்டு அதிசயித்தனர்.

கடந்த 2003 ஆம் ஆண்டில் பெரும் போகத்தில் ஈடுபட்ட விவசாயிகளில் 42 பேருக்கு மட்டும் இப்போது மானியம் வழங்குகிறோம். இவர்கள் ஒவ்வொருவருக்கும் தலா 16 ஆயிரம் ரூபா வீதம் இன்று வழங்குகிறோம்.

தென்னைபோல் 4வது பெருந்தோட்ட தாவரமாக சீமைக்கிழுவை என்ற மரம் சிபார்சு செய்யப்பட்டுள்ளது. யூரியா உரத்துக்குப் பதிலாக ஒரு ஆளினால் தூக்கக்கூடிய அளவு சீமைக்கிழுவையை மரத்துக்குப் பசளையாக்கினால் அதற்கு யூரியா அவசியமில்லை.

இதற்கும் மானியம் கொடுக்கத் தயாராய் உள்ளோம்.

சீமைக்கிழுவைத் தடியில் அடிப்படை மின்சாரம் தயாரிக்கலாம். இதை விட காஸ் அடுப்புக்குப் பதிலாக இந்தத் தடிகளை விறகாகப் பயன்படுத்தலாம். திருத்தியமைக்கப்பட்ட அடுப்பு ஒன்று தயாரிக்கப்பட்டுள்ளது. இதில் 9 அங்குல நீளமான 4,5 தடிகளை பயன்படுத்தி அடுப்பை மூட்டினால் 3 மணி நேரத்தில் ஒன்றரை கிலோ அரிசியும் 2 கறியும் சமைக்கலாம். சீமைக்கிழுவைத்தடி ஒரு கிலோ ரூபா 3.50 விலைக்கு கொள்வனவு செய்யப்படுகிறது.

தேங்காய் உரி மட்டையில் இருந்து தும்பு எடுத்த பின்பு கழிவாகும் தும்பு சோறு 1 றக்சர் பெட்டி 1500/= என்ற விலை யில் உள்ளது. அன்னாசிப்பழ செய்கைக்கு இச்சோறு உரமாக இடப்படுகிறது. தென்னை உற்பத்தியாளர்கள் எல்லோரும் சேர்ந்து ஓர் சங்கம் அமைத்தால் நாம் இன்னும் எவ்வளவோ திட்டங்களை நடைமுறைப்படுத்தலாம். இவ்வளர்ச்சிகளுக்கு எமது யாழ். அரச அதிபர் உறு துணையாக இருக்கிறார். தெங்கு உற்பத்தியில் அரச அதிபரின் ஆர்வம் அபரிமித மானது. அவருடைய காலத்திலே நாம் செய்ய வேண்டியவற்றை செய்ய வேண்டும் எனக் கூறினார். (த-108)

## தாக்குதலுக்கு இலக்காகி மாணவன் மூர்ச்சை

(துன்னாலை)

கரவெட்டி சம்பந்தர் கடைக்கு அருகே நேற்று முன்தினம் இரவு 9 மணியள வில் மிக மோஷமாக தாக்கப்பட்டு தலை யில் படுகாயமடைந்து சுயநினைவிழந்த நிலையில் யாழ் பல்கலைக்கழக விஞ்ஞான பீட மாணவரான சிவசுப்பிரமணியம் முரளிதரன் என்பவர் அயலவரால் மீட்கப்பட்டு மந்திகை மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டார். பின்னர் உடனடியாக யாழ். போதனா வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டு தீவிர சிகிச்சைக்கு உட்படுத்தப் பட்டுள்ளார். (இ-101)

## மாணவர்கள் இடமாற்றம்

(துன்னாலை)

கரவெட்டி கட்டைவேலி மெதடிஸ்த திருச்சபை சிறுவர் இல்ல மாணவர்கள் அனைவரும் வதிரி சிறி பரமானந்த சிறார் முதியோர் இல்லத்திற்கு மாற்றப்பட்டுள்ளனர்.

கடந்த 11ஆம் திகதி பருத்தித்துறை நீதிமன்றின் உத்தரவுக்கமைய 12ஆம் திகதி சனிக்கிழமை மாலை 5 மணியளவில் இவ் இல்லத்திற்கு மாணவர்கள் மாற்றப்பட்டனர்.


மேற்படி மெதடிஸ்த திருச்சபை சிறுவர் இல்ல மாணவர்கள் சிலர் தமக்கு அங்கு போதிய வசதிகள் செய்யப்படவில்லையென யாழ்.மனித உரிமை ஆணைக்குழுவிலும், சிறுவர் பாதுகாப்புக குழுவிலும் செய்த முறைப்பாட்டையடுத்து நீதிமன்றின் கவனத்திற்கு இவ்விடயம் கொண்டுவரப்பட்டு வழக்கொன்றும் தாக்கல் செய்யப்பட்டுள்ள நிலையில் இம் மாணவர்கள் இடமாற்றஞ் செய்யப் பட்டுள்ளதாகவும் அறியப்படுகிறது. (ற-101)


















காரைநகர் கணனி பயிற்சி நிலையத்தின் இரண்டாம் ஆண்டு நிறைவு விழாவும் மாணவர்களிற்கு சான்றிதழ வழங்கும் வைபவமும் காரைநகர் இந்துக் கல்லூரியில் நடைபெற்றது.

இதன் போது இந்நிகழ்வின் விருந்தினர்கள் மண்டபத்திற்கு அழைத்து வரபபடுவதனையும், விருந்தினர்களிற்கு மலர்மாலை அணிவிப்பதனையும், கணனிப் பயிற்சி நிலைய இயக்குநர் கோ.சிறிவரதன் மற்றும் பிரதம விருந்தினராக கலந்துகொண்ட சமூகவியல் பேராசிரியர் என்.சண்முகலிங்கன் ஆகியோர் உரையாற்றுவதனையும், கணனி பயிற்சி பரீட்சையில் அதிகூடிய புள்ளிகளைப் பெற்ற மாணவிக்கு தங்கப்பதக்கம் அணிவிப்பதையும், சான்றிதழ் வழங்கப்படுவதனையும் மற்றும் விழாவில் நடைபெற்ற கலை நிகழ்வுகளையும் விழாவில் கலந்து கொண்டோரில் ஒரு பகுதியினரையும் படங்களில் காணலாம்.

படங்கள்: (காரைநகர் செய்தியாளர்)

## பறங்கி ஆற்றுக்கு மேலாகப் பாலம் அமைக்க மக்கள் கோரிக்கை

(முல்லைத்தீவு)

முல்லைத்தீவு மாவட்டத்தையும் மன்னார் மாவட்டத்தையும் பிரிக்கும் எல்லைக் கோடாத இருக்கும் பறங்கி அறு மாந்தை கிழக்குப் பிரதேசத்தின் எல்லையாகவும் திகழ்கின்றது.

இந்த எல்லையை ஊடறுத்துச் செல்லும் நட்டான்கண்டல் - பாலம்பிடடி வீதியினால்தான் பிரசித்தி பெற்ற மடுத்தேவாலயத்துக்கு முல்லைத்தீவு மாவட்ட மக்கள் செனறு வருகின்றார்கள்.

முல்லைத்தீவு மாவட்டத்தில் முல்லை நகரத்திலேயே பெருமளவு கத்தோலிகக மக்கள் வசித்து வருகின்றார்கள். முல்லைத்தீவில் இருந்து வெள்ளாங்குளம் ஊடாக மடுத் தேவாலயம் செல்ல சுமார் 136 கிலோ மீற்றர் தூரம் செல்லவேண்டியுள்ளது. ஆனால் நட்டான் கண்டல் ஊடாகச செல்வதானால் சுமார் 96 கி.மீ தூரம் செல்ல வேண்டும்.

இத்தனைக்கும் இப்பாதைக்கு தடையாக உள்ளது இதன் குறுக்கே செல்லும் பறங்கி ஆறும், சேதமடைந்திருக்கும் 30 கிலோ மீற்றர் தூரமான நட்டான்கண்டல் பாலம்பிட்டி வீதியுமே ஆகும்.

இப் பறங்கி ஆற்றுக்கு மேலாகப் பாலம் ஒன்று கட்டப்படுவதுடன் குறிப்பிட்ட பாதையும் செப்பனிடப்பட வேண்டியது கட்டாய தேவையாகும்.

இப்பாதை ஊடாகவே கோடை காலங்களில் மாந்தை கிழக்குப் பிரதேச மக்கள மடுப்பிரதேசத்துக்கு வர்த்தக நோக்கங்களுக்காக சென்று வருகின்றார்கள்.

இதே பறங்கியாறுதான் மூன்று முறிப்பில வைத்து வவுனியா மாவட்டத்தை பிரிக்கின்றது. அந்த இடத்தில் பறங்கி ஆற்றுக்கு மேலாக நெக்கொட் நிறுவனத்தால் 1998ஆம் ஆண்டு 35 இலட்சம ரூபா செலவில் பாலம் ஒன்று அமைக்கப்பட்டதாயினும் அப்பாலம் 1999ஆம் ஆண்டு றணகோச இராணுவ நடவடிக்கையின் போது விமானக்குண்டுத் தாக்குதலால் தகர்க்கப்பட்டு நிர்மூலமாக்கப்பட்டது. மீண்டும் அப்பாலம் புனரமைக்கப் படாததால் அப்பாதை ஊடாக வாகனங்கள் செல்வது தடைப்பட்டேயுள்ளது.

இரு மாவட்டங்களையும் பிரிக்கும் இப் பறங்கி ஆற்றுக்கு மேலால் பாலம் அமைக்கப்பட்டால் கத்தோலிக்க ம்க்கள் மடுத் தேவாலயத்துக்குச் சென்று வருவது இலகுவாவது மட்டுமல்லாமல் இரு மாவட்டங்களினது வர்த்தக கலாசார உறவுகளும் மேம்படுத்தப்படும்.

எனவே மாந்தை கிழக்கு பிரதேச சபையன் நிர்வாக எல்லைக்குட்பட்ட இப்பாதையைச் செப்பனிடுவதோடு பறங்கி ஆற்றுக்கு மேலாக பாலம் அமைக்க சம்பந்தப்பட்ட திணைக்களமும் அரச சார்பற்ற நிறுவனங்களும் முன்வர வேண்டும் என அப்பகுதி மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (ற-128)

# நீர்வெறுப்புநோய் -சிகிச்சை இன்றேல் மரணம் நிச்சயம்

34 வயதுடைய இளம் குடும்பஸ்தர் விசர் நாய்க்கடியினால் மரணமுற்றார் என்ற வேதனைமிகு நிகழ்வு சென்ற வார இறுதியில் நிகழ்ந்தமையை யாரும் மறந்திருக்கமாட்டீர்கள்.


நீண்ட காலமாக இலங்கையில் இருந்து வருகின்ற முக்கியமான பொதுச் சுகாதாரப் பிரச்சினையாக விலங்கு விசர் நோய் அல்லது நீர்வெறுப்பு நோய் விளங்குகின்றது. இதன் தாக்கத்திற்கு தகுந்த சிகிச்சையினைப் பெறத் தவறியமையினால் இலங்கையில் ஆண்டுதோறும் 100-150 வரையானோர் இறக்கின்றார்கள்.

இந்நோயினால் பாதிக்கப்பட்டு இறப்பவர்கள் பெரும்பாலும் இளவயதினராக இருப்பதனால் அம்மரணங்கள் இலகுவில் குடும்பத்தினராலோ சமூகத்தினராலோ ஏற்க முடியாத வேதனைமிகுந்த ஒன்றாக இருக்கும்.

புள்ளி விபரங்களின்படி விலங்கு விசர் நோயினால் இறப்பவர்களின் எண்ணிக்கை அண்மைக்காலங்களில் அதிகரித்து வருகின்றது. மேற்படி நிகழ்வானது எம்மக்களிடையே இந்நோய் பற்றிய போதிய அறிவும் விழிப்புணர்வும் இன்மையையே காட்டி நிற்கின்றது. எனவே இந்நோய் பற்றிய தெளிவான அறிவும் விளக்கமும் மிகவும் இன்றியமையாததாகும்.

காட்டு மிருகங்களிடையே பொதுவாகக காணப்படும் இந்நோய், பொதுவாக வௌவால், நரி, கீரி, அணில், ஓநாய் ஆகியவற்றிலும் வீட்டு வளர்ப்புப் பிராணிகளான நாய், பூனை ஆகியவற்றிலும் காணப்படுகின்றது.

### நோய் பரவும் விதம்




### நோய்க்காரணி

இது ஒரு வைரஸினால் ஏற்படுத்தப்படும் நோயாகும். இந்த வைரஸ் ஆனது நோய்த்தொன்றுள்ள விலங்குகளின் உமிழ்நீரில் காணப்படுகிறது. விலங்குகள கடிக்கும்போது இந் நோய்க் காரணீயான வைரஸ் கடிகாயத்தினூடாகப் பரவுகின்றது.

### நோயரும்பு காலம்

கிருமித் தொற்று ஏற்பட்ட நோய்க்கான அறிகுறிகள் தென்பட எடுக்கும் காலம் நோயரும்பு காலம் எனப்படும்.

இந்நோயினது நோயரும்பு காலம் பொதுவாக 1-2 மாதங்களாகும். சில வேளைகளில் இது 1வாரம் தொடக்கம் 6 வருடங்கள் வரை வேறுபடலாம்.

மேலும் இந்நோயரும்பு காலம் விசர் நாய்க்கடிக்கு உள்ளாகுபவரின் வயது, நோய் எதிர்ப்பு நிலை, காயம் ஏற்பட்ட இடம், காயத்தின் தன்மை மற்றும் தொற்றுககுள்ளான கிருமியின் எண்ணிக்கை போன்றவற்றில் தங்கியிருக்கும்.

### நோய்ப் பரம்பல்

விசர்நாய் கடித்த காயத்தில், உமிழ் நீர்மூலம் விடுவிக்கப்படும் வைரஸ் ஆனது முதலில் பெருக்கமடைந்து எண்ணிக்கையில் அதிகரித்து பின்பு சுற்றயல் நரம்புகளினூடாக மைய நரம்புத் தொகுதியை அடைந்து நீர் வெறுப்பு நோயை ஏற்படுத்தும்.

### நோய் அறிகுறிகள்

1) விசர் நாய் கடித்ததைத் தொடர்ந்து இலேசான காய்ச்சல், தலையிடி, சோர்வு தொண்டைநோ, பசியின்மை, ஓங்காளம், சத்தி, கடித்த இடத்தில் வலி நமைச்சல் போன்ற பொதுவா்ன அறிகுறிகள் தென்படும்.

2) அதனைத் தொடர்ந்து நரம்புத் தொகுதி பாதிப்படைவதால் ஏற்படும் அறிகுறிகள் தோன்றும்.

(I) சத்தம், வெளிச்சம், காற்றின் தொடுகை போன்றவற்றினைச் சகிக்க முடியாது. நோயாளிகள் சாதாரண பழக்கவழக்கத்திலீருந்து மாற்றம் காட்டுவார்கள். பயம், இருண்ட இடங்களை நாடுதல், கோபப்படுதல் போன்ற உணர்ச்சிகளை வெளிப்படுத்துவர்.

(II) இரட்டைப் பார்வை (Double Vision)

(3) தொடர்ந்து தசைப்பிடிப்பு அதிகமாகும். நீர் விழுங்க முடியாத நிலை ஏற்படும்.

நீரைக் கண்டாலோ அல்லது அதனது ஒலியினைக் கேட்டாலோ தசைப்பிடிப்பு மேலும் அதிகமாகும். இதனால் நீரைக் கண்டால் வெறுத்து ஓடுவார்கள். இதனை வீட ஓய்வின்மை, அருட்டப்பட்ட நிலை, தசைத் தொழிற்பாடு இழத்தல், தசைப் பிடிப்பு, உயர் குருதி அழுத்தம் போன்ற அறிகுறிகள் ஏற்படும்.

நோய்த்தடுப்பூசிகள் முறையாக குறித்த தவணைகளில் பூரணமாகப் பெறாவிட்டால் நூறு சதவிகிதம் மரணம் ஏற்படும்.

### எவ்வாறு தடுக்கலாம்?

1) நாய் கடித்த காயத்தினை சவர்க்காரமும், நீரையும் கொண்டு நன்கு கழுவுதல் வேண்டும்.

2) விசர் நாய்க்கடிக்கு எதிரான தடுப்பூசியினை (Immovax) முறையாகப் போடுதல் வேண்டும்.

3) கடித்த நா்ய் நீர் வெறுப்பு நோய்க்குரிய அறிகுறிகளைக் காண்பிக்கின்றதா என்பதை அவதானிக்க வேண்டும்.

4) வீட்டில் வளக்கும் நாய், பூனைகளுக்கு விலங்கு விசர் நோய்க்கான தடுப்பூசி போடுதல் வேண்டும்.

இங்கு இந்த தடுப்பூசி ஏற்றும் செயறபாடு பொதுச் சுகாதாரப் பரிசோதகர்களினால் (PHI) செயற்படுத்தப்படுகின்ற போதும் மக்கள் அக்கறையின்மையாக இருப்பதினை அவதானிக்கக்கூடியதாக இருக்கின்றது.

கட்டாக்காலி விலங்குகளை அழித்தல, இறுதியாக சுகாதார அமைச்சினால் வெளியிடப்பட்ட ஆண்டறிக்கையில், இலங்கையிலே 7 நபர்களுக்கு ஒரு நாய் உள்ளதாக புள்ளி விபரங்கள் கூறுகின்றன.

### தடுப்பூசி போட வேண்டிய சந்தர்ப்பங்கள்

(1) *நாய் கடிப்பதற்கு முன்னர்*

விலங்குகளுடன் கூடுதலாகப் பழகுபவர்கள் உதாரணமாக கால்நடை வைத்தியர்கள், அங்கு பணிபுரியும் தொழிலாளர்கள், வன இலாகா அதிகாரிகள், காடுகளுக்குச் செல்லும் ஆராய்ச்சியாளர்கள மற்றும் வேட்டைக்காரர்கள் முன்னெச்சரிககையாக தடுப்பூசி போடுதல் வேண்டும்.

தடுப்பூசி போட வேண்டிய நாட்கள் முதலாவது மற்றும் 7 நாட்களின் பின், பின்பு 28 நாட்களின் பின்.

(2) *நாய் கடித்த பின்பு*

* கடித்த நாய் இரு வாரங்களுக்குள் இறத்தல், காணாமல் போதல் அல்லது ஆரோக்கியமற்றுக் காணபடல்.

* கடித்த நாயினை தொடர்ந்து கண்காணிக்க முடியாத போது உதாரணமாக தெரு நாயினால் கடிபடும் நிலை.

* மற்றும் கடித்த நாய்க்கு நீர் வெறுப்பு நோய் உள்ளது என சந்தேகிக்கும் போது.

### நீர் வெறுப்பு நோய் உள்ள நாயில் காணப்படும் பொதுவான அறிகுறிகள்

(1) நாயின் சாதாரண நடத்தையில் மாற்றம்.
(2) நாய் அமைதியின்றி அலைதல்.
(3) நாயின் குரல் மாறுதல்.
(4) நாயின் வாயிலிருந்து அதிகளவு உமிழ் நீர் வடிதல்

### யதார்த்திகன்

மக்கள் பொதுவாக ஏற்பு வலிக்குரிய தடுப்பூசியை (tetanus toxoid) விசர் நாய்க்கடிக்குரிய தடுப்பூசியாகக் (Immovax) கருதி நீர் வெறுப்பு நோய்க்குரிய தடுப்பு ஊசியினைப் போடாமல் விடுகின்றார்கள். இது மிகவும் ஆபத்தானது. நூறு சதவிகிதம் இறப்பை ஏற்படுத்தும்.

விசர் நாய் கடித்தால் விசர் நாய்/ நீர் வெறுப்பு நோய்க்குரிய தடுப்பூசி கட்டாயம் போடுதல் வேண்டும்.

முற்றான தடுப்பூசியினை முதலாவது ஊசி போட்டு, மூன்றாம் ஏழாம் பதினான்காம் முப்பதாம் தொண்ணூறாம் நாட்களில் போடுதல் வேண்டும. அன்றேல் விலங்கு விசர் நோயினால் மரணம் நிச்சயமானது.

### யாழ். மாவட்டத்தில் புள்ளி விபரம்

| வருடம் | இறப்புக்களின் எண்ணிக்கை |
|---|---|
| 1998 | 06 |
| 1999 | 12 |
| 2000 | 15 |

□

---

இந்தியத் தலையீடு தொடக்கம்?

## ரணில் - நிருபமாராவ் சந்திப்பு

(கொழும்பு)

ஐக்கிய தேசியக் கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்காவை இலங்கைக்கான இந்தியத் தூதுவர் நிருபமாராவ் நேற்று முன்தினம் சந்தித்துக் கலந்துரையாடியுள்ளார்.

ஜனாதிபதியாகத் தேர்வு செய்யப்பட்டுள்ள மகிந்த ராஜபக்ஷவையும் தொடர்பு கொண்டு இந்தியத் தூதர் நிருபமாராவ விரைவில் பேச்சுக்களை நடத்த உள்ளதாக இந்தியத் தூதரக வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

மஹிந்த ராஜபக்ஷ ஜனாதிபதியாகத் தெரிவு செய்யப்பட்டுள்ள நிலையில் இனப்பிரச்சினைக்கான அமைதிப் பேச்சுக்களில் இந்தியா மீண்டும் தலையிடக் கூடும் என்ற நிலையில் இந்தியத் தூதுவரின் தீவிர செயற்பாடுகள் கொழும்பு அரசியல் வட்டாரத்தில் பல்வேறு ஊகங்களை எழுப்பியிருக்கிறது.

மஹிந்த, ரணில் தரப்பினரை இணைதது அமைதி முயற்சிகளை முன்னெடுக்கும் பணிகளில் இந்தியத் தலையட்டு தொடங்கியிருக்கின்றதா? என்ற கேள்விகளை இந்தியத் தூதரக வட்டாரங்கள் மறுத்துள்ளன. இந்தக் கேள்விக்கான பதிலை இப்போது அளிக்க இயலாது இப்போதுதான் மஹிந்த ராஜபக்ஷ பதவியேற்றுள்ளார் என்று அவ் வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

ஒருமித்த கருத்தை உருவாக்குவதன் மூலமே பிரச்சினைகளுககுத் தீர்வு காண முடியும் என்பதில் இந்தியப் பிரதமர் மன மோகன்சிங் நம்பிக்கை கொண்டவர் என்பதை மறந்து விடக்கூடாது என்றும் தூதரக வட்டாரங்கள் சுட்டிக்காட்டியுள்ளன.(ந-4)

### மகாசங்கம் பாராட்டு

(கொழும்பு)

மஹிந்த ராஜபக்ஷ நிறைவேற்று அதிகாரம் கொண்ட 5 ஆவது ஜனாதிபதியாகத் தெரிவு செய்யப்பட்டுள்ளமை குறித்து மகாசங்கம் பாராட்டுத் தெரிவித்துள்ளது.

ராஜபக்ஷ ஜனாதிபதியாகப் பதவி ஏற்றுள்ளமை மக்களுக்குக் கிடைத்துள்ள வெற்றியாகும் என்று பேராசிரியர் தம்மாலோக தேரர் தெரிவித்துள்ளார்.

இதுதவிர, பல வெளிநாடுகளின் பிரதம மந்திரிகளும் தலைவர்களும் ராஜபக்ஷவுக்கு பாராட்டுச் செய்திகளை அனுப்பி வைக்துள்ளனர். (ந-7)

## அமைச்சுப் பொறுப்புக்களை ஜே.வி.பி.ஏற்க மாட்டாது?

அரசியல் வட்டாரங்கள் தகவல்

புதிய அமைச்சரவையில் எந்த அமைச்சுப் பொறுப்பையும் ஜே.வி.பி ஏற்றுக் கொள்ளாது என்று கொழும்பு அரசியல் வட்டாரங்கள் கருத்து வெளியிட்டுள்ளன.

இருப்பினும், ஜே.வி.பியின் பிரசாரச் செயலாளர் விமல் வீரவன்ஸ ஊடகத்துறை அமைச்சராக நியமிக்கப்படக்கூடும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

கடந்த ஆண்டு அரசாங்கத்திலிருந்து விலகிய ஜே.வி.பியை மீண்டும் அரசாங்கத்தில் பங்கேற்க அழைப்பது தொடர்பான பேச்சுக்கள் இரு கட்சிகளிடையேயும் தீவிரமாக நடத்தப்பட்டு வருவதாகக் கூறப்படுகிறது. (ந-4)

## தேர்தலுக்காக மூடப்பட்ட அனைத்து பாடசாலைகளும் இன்று திறப்பு

ஜனாதிபதித் தேர்தல் நடவடிக்கைகளுக்காக மூடப்பட்ட சகல அரசாங்க பாடசாலைகளும் இன்று தொடக்கம் மீண்டும் திறக்கப்படவுள்ளதாக கல்வியமைச்சின் மேலதிக செயலாளர் எஸ்.எல்.குணவர்த்தன அறிவித்துள்ளார்.

ஜனாதிபதித் தேர்தலின் போது வாக்களிப்பு நிலையங்களாகவும், வாக்கெண்ணும் மத்திய நிலையங்களாகவும் பெரும்பாலான பாடசாலைகள் பயன்படுத்தப்பட்டதால் சகல பாடசாலைகளுக்கும் ஒரு வார காலம் விடுமுறை வழங்கப்பட்டிருந்தது.

தேர்தல் தொடர்பான சகல பணிகளும் முடிவடைந்துள்ளதால் இன்று தொடக்கம் பாடசாலைகள் திறக்கப்பட்டு கல்வி நடவடிககைகள் ஆரம்பிக்கப்படவுள்ளன.

இந்த ஆண்டின் பாடசாலையின் கல்வி நடவடிக்கைகள் யாவும் எதிர்வரும் டிசம்பர் மாதம் 9ஆம் திகதியுடன் நிறைவடையவுள்ளன.

இன்னும் 15 தினங்கள் மட்டுமே பாடசாலைகள் இயங்கவுள்ளன. இக் காலப் பகுதிக்குள் சகல பாடசாலைகளிலும் வகுப்பேறறுப் பரீட்சைகள் நடாத்தப்படவுள்ளன.

எனவே இந்தக் காலப் பகுதியை நன்கு திட்டமிட்டு மூன்றாம் தவணைப் பரீட்சையினையும் வகுப்பேற்றும் நடவடிக்கைகளினையும் மேற்கொண்டு அடுத்த ஆண்டின் கல்வி நடவடிக்கைகளை ஆரம்பிப்பதற்கு மாணவர்களைத் தயார் செய்யுமாறு சகல பாடசாலை அதிபர்களையும் கல்வியமைச்சு கேட்டுள்ளகு. (ந-9)

## தடுப்பு நடவடிக்கைகள்

வெளிநாடுகளிலிருந்து இலங்கைக்கு வரும் பறவைகள் மூலம் பறவைக்காய்ச்சல் பரவாமல் இருப்பதற்கான தடுப்பு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளதாக விலங்கியல் மற்றும் சுகாதாரப் பணிப்பாளா நாயகம் எஸ்.கே.ஆர்.அமரசேகர தெரிவித்தார்.

இது தொடர்பாக வனவிலங்கியல் திணைக்கள அதிகாரிகளுககு அறிவுறுத்தும் திட்டமொன்றும் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

பறவைக்காய்ச்சல் நாட்டில் பரவும் படசத்தல் அவசர உதவிகளை வழங்கக் கூடிய நாடுகள் தொடர்பாக உலக உணவு மற்றும் விவசாய அமைப்புடன் பேச்சுவார்த்தை நடாத்தப்பட்டுள்ளது.

உல்லாசப் பறவைகள் கூடுதலாக வரும் பிரதேசங்கள் குறித்து விசேட கவனம் செலுத்தப்பட்டு வருவதாகவும் அவர் கெரிவிக்கார். (சு-9)

# பக்தாத்தில் கார்க்குண்டுத் தாக்குதல்களில் 3 நாட்களில் 125 பேர் பலி; பலர் படுகாயம்



(பக்தாத்)

ஈராக்கில் நேற்று முன்தினம் மதத் தலைவர் இறுதி சடங்கில் கார்குண்டு வெடித்ததில் 50 பேர் உடல் சிதறிப் பலியாகியுளளதுடன் சுமார் 75பேர் வரை படுகாயமடைந் துள்ளனர்.

ஈராக்கில் மறு சீரமைப்பு பணிகளில் அமெரிக்கப் படையினரும் வெளிநாட்டினரும் ஈடுபட்டுவருகிறார்கள் வெளிநாட்டவரின் மீதும் ஈராக் பொலிஸாா மீதும் சதாம் ஆதரவு தீவிரவாதிகள் குறிவைத்து தாக்குதல் நடத்தி வருகிறார்கள்.

இந்த நிலையில், ஷியா முஸ்லிம் பிரிவினருக்கும் சன்னி முஸ்லிம் பிரிவினருக்கும் இடையே மோதல் நடைபெற்றுவருகிறது. ஷியா முஸ்லிம்களின் மசூதிகள் மீது சன்னி பிரிவினர் குறிவைத்துத் தாக்குதல் நடத்தி வருகிறார்கள்.

கடந்த வெள்ளிக்கிழமை பக்தாத் அருகே உள்ள 2 ஷியா முஸ்லிம் மசூதிகள் மீது கார்குண்டுத் தாக்குதல் நடைபெற்றது. இதில் 60க்கும் மேற்பட்டவர்கள் பலியானார்கள்.

இதில் மதத்தலைவர் ஒருவரும் பலியானார். அந்த மதத் தலைவரின் இறுதி ச்டங்கு பதிலா நகரில் நேற்றுமுன்தினம் நடைபெற்றது. இறுதி ஊர்வலமும் நடைபெற்றது.

இந்த இறுதி ஊர்வலத்திலும் தீவிரவாதிகள் கார்குண்டு தாக்குதல் நடத்தினார்கள். இந்தத் தாக்குதலில் 50போ உடல்சிதறிப் பலியானார்கள். 75க்கும் மேற்பட்டவர்கள் படுகாயம் அடைந்துள்ளனர்.

இந்தத் தாக்குதல் நடப்பதற்கு சில நிமிடங்களுக்கு முன் பக்தாத் நகரில் உ்ள்ள ஒரு சந்தையில் நிறுத்திவைக்கப்பட்டிருந்த கார்வெடித்தது. இதில் 15பேர் பலியானார்கள்.

தொடர்ச்சியாக நடந்த வெடிகுண்டுத் தாக்குதல்களில் பக்தாத் நகரம் தீப்பற்றி எரிகிறது. (ற)



பாரீஸ் நகரில் ஜோடியாக விளையாடும் ஸ்கேட்டிங் போட்டி நேற்று நடந்தது. அதில் அமெரிக்க வீரர் மார்கன், வீராங்கனை மேக்சிம் ஆகியோர் உடலை வளைத்து ஐஸ்கட்டி மைதானத்தில் சாகசம் புரிந்து பார்வையாளர்களை பரவசப்படுத்திய காட்சி.



அமெரிக்காவின் கலிபோர்னியா மாகாணத்தில் உள்ள வென்டசுராவில் ஆயிரத்து 500ஏக்கர் காட்டுப் பகுதியில் காட்டுத் தீ பரவியது. தீயை அணைக்க விமானமூலம் நீர் பாய்ச்சப்படுகிறது.

## நேபாளத்தில் சண்டை நிறுத்தம்

# மாவோயிஷ்ட் தீவிரவாதிகள் சரணடைவதற்கு சம்மதம்


(காத்மண்டு)

நேபாளத்தில் 2 மாவோயிஷ்டு தீவிரவாதக் குழுக்கள் மன்னர் ஆட்சிக்கு எதிராக ஆயுதம் ஏந்திப் போராடி வருகின்றனர்.

பல ஆண்டுகளாக தீவிரவாதிகளுக்கும் இராணுவத்துக்கும் இடையே நடந்த சண்டையில் 20 ஆயிரத்துக்கும் மேற்பட்டவர்கள பலியாகிவிட்டனர். இந்த நிலையில் சமரச முயற்சிகளும் மேற்கொள்ளப்பட்டன. மன்னர் ஞானேந்திராவுக்கு எதிராக 7 எதிர்க்கட்சிகள் சேர்ந்து போராட்டம் நடத்தி வருகின்றன. இந்த 7 கட்சிகள் தொடங்கி உள்ள இயக்கத்துக்கும், அவற்றின் போராட்டத்துக்கும் மாவோ தீவிரவாதிகள் ஆதரவு அளிக்க முன்வந்துள்ளனர்.

இது தொடர்பாக 7 கட்சி தலைவர்களுக்கும், தீவிரவாதிகளுக்கும் இடையே இரகசியப் பேச்சுவார்த்தை நடைபெற்றது. இந்தியாவில் இந்த பேச்சுவார்த்தை நடந்ததாகக் கூறப்படுகிறது.

அப்போது தீவிரவாதிகள் ஐககிய நாடுகள்சபை பார்வையாளர்கள் முன்னிலையில் ஆயுதங்களை ஒப்படைத்து சரணடையவும், மன்னருக்கு எதிரான 7கட்சி கூட்டணிக்கு ஆதரவு அளிக்கவும் சம்மதம் தெரிவித்துள்ளதாகத் தெரியவருகிறது. (ற)



நீளம் 345 மீற்றர் அகலம் 41 மீற்றர் உலகின் மிகப்பெரிய பயணிகள் கப்பல் 'குயின் மேரி-2' வடக்கு ஜேர்மனியின் ஹாம்பர்க் துறைமுகத்தில் பராமரிப்பு மற்றும் மராமத்து பணிகளுக்காக கடந்த 11 நாட்களாக நிறுத்தப்பட்டிருந்தது. பணிகள் முடிந்து துறைமுகத்தில் இருந்து நேற்று கம்பீரமாகப் புறப்படுகின்றது. 'குயின்மேரி-2'

# பிரிட்டனில் மரண தண்டனையை மீண்டும் அமுல்படுத்தக் கோரிக்கை

(இலண்டன்)

பிரிட்டனில் மரணதண்டனையை மீண்டும் அமுல்படுத்த வேண்டுமென்று அந்த நாட்டின் முன்னாள் பொலிஸ் தலைமை அதிகாரி தெரிவித்துள்ளார்.

கொள்கைக் கோஷ்டி ஒன்று நிராயுதபாணியாக நின்ற பெண் பொலிஸார் ஒருவரை படுகொலைசெய்த சம்பவத்தை அடுததே அவர் இந்தக் கருத்தைத் தெரிவிததுள்ளார்.

கடந்த வெள்ளிக்கிழமை பிரிட்டனின் வடக்குப் பகுதியிலுள்ள வங்கியொன்றில கொள்ளைச்சம்பவம் ஒன்று இடம்பெற்றபோது அந்த இடத்திற்கு சென்ற பெண் பொலிஸ் உத்தியோகத்தர் அந்தக் கோஷ்டியினால் சுட்டுக்கொல்லப்பட்டுள்ளார்.

இந்தச் சம்பவத்தை அடுத்து பிரிட்டனின் பொலிஸ் உத்தியோகத்தர்களுக்கு ஆயுதம் வழங்கப்பட வேண்டுமென்றும் மரண தண்டனையை மீண்டும் அமுலுககுக் கொண்டுவருவதற்கு அரசாங்கத்திற்கு அழுத்தம் கொடுக்க வேண்டு மென்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

பிரிட்டனில் 1965ஆம் ஆண்டிலேயே இறுதியாக மரணதண்டனை நிறைவேற்றப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (ற-9)

# அநாவசியமாக இந்தோனேஷியாவிற்கு செல்ல வேண்டாமென எச்சரிக்கை

இந்தோனோஷியாவில் பயங்கரவாதத் தாக்குதல்கள் இடம்பெறக்கூடுமெனக் கூறி மேற்குலக நாடுகள் தத்தமது பிரஜைகளுக்கு அந்நாட்டுக்கு பயணம் செய்வது தொடர்பில் எச்சரிக்கைகளை விடுத்துள்ளன.

ஜகார்த்தாவில் வைத்து வெளிநாட்டவர்களைக் கொல்வதற்குத், திட்டங்கள் தீட்டப்பபடுவதாக அன்சார்- அல்-முஸ்லிம் லீக்' என்ற இணையத்தளம் செய்தி வெளியிட்டதையடுத்து மேற்குலக நாடுகள் இந்த எச்சரிக்கைகளை விடுத்துள்ளனர்.

அமெரிக்கா, பிரிட்டன் மற்றும் அவுஸ்திரேலியா ஆகிய நாடுகள் அவர்களது பிரஜைகளுக்கு 'அநாவசியமாக இந்தோனேஷியாவிற்கு் பயணம் மேற்கொள்ளக் கூடாது' என்று அறிவித்துள்ளன.

இந்தோனேஷியாவின் வர்த்தகக் கட்டடத் தொகுதிகள், ஹோட்டல்கள், வெளிநாட்டுத் துாதரகங்கள் மற்றும் ஜகார்த்தாவில் உள்ள பிரதான சந்தைகள் ஆகியவற்றில் கைக்குண்டுத்தாக்குதல்கள் அல்லது படுகொலைச் சம்பவங்கள் இடம்பெறலாம் என்றும் அவ் இணையத்தளம் அறிவித்திருந்தமை குறிபபிடத்தக்கது. (ற)

## இழப்பீடு வழங்கக் கோரி

# காஸ்ட்ரோ மீது வழக்குத் தாக்கல்

(மியாமி)

ரூ.270 கோடி இழப்பீடு வழங்கக்கோரி கியூபா அதிபர் பிடல் காஸ்ட்ரோ மீது அமெரிக்காவின் புளோரிடா மாநிலத்தில் உள்ள நீதிமன்றங்களில் வழக்குத் தொடரப்பட்டுள்ளது.

கியூபாவைச் சேர்ந்த நிலோ ஜெரிஸ், பெல்கிஸ் பெரோ (51) ஆகியோர் இந்த வழக்குகளைத் தொடர்ந்துள்ளனர். மியாமி நீதிமன்றத்தில் நிலோ ஜெரிஸும், தம்பா நதிமன்றத்தில் பெல்கிஸ் பெரோவும் வழக்குத் தொடர்ந்துள்ளனர்.



இருவரும தாஙகள் 30 ஆண்டுகளுக்கு முன் ஹவானாவில் உள்ள மனநல மருத்துவமனையில் இருந்த போது தமக்கு மின்சார ஷாக் கொடுக்கப்பட்டதாகவும அதனால் உடல்நலம் பாதிக்கப்பட்டதாகவும் கூறியுள்ளனர். (ற)

ஒரு நாட்டில் அறிவிருக்கவேண்டிய இடத் தில் அதிகாரம் அமரத்தொடங்கிவிட்டால், அதன் பிறகு அது முன்னால் வந்து அந்த நாட்டை படுகுழிக்கு இழுத்துச் சென்று விடும். இது வரலாற்று சுவடு தெரிவிக்கும் பாடம்
- இங்கர்சால்

வலம்புரி

## பண்டாரநாயக்க குடும்பத்திற்கு அரசியல் ஆபத்து காத்திருக்கிறது

மகிந்த ராஜபக்ஷ ஜனாதிபதியாக வெற்றி பெற்றதால் தென்னிலங்கை அரசியல் புலத்தில் அதிரடியான மாற்றங்கள் இடம்பெறப் போவது உறுதியாகிவிட்டது.

ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் ஜனாதிபதி வேட்பாளராக மகிந்தவை நியமிக்க முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க ஒருபோதும் விரும்பவில்லை.

மகிந்த பிரதமராக இருந்தபோது ஜனாதிபதியாக இருந்த சந்திரிகா குமாரதுங்காவின் கட்டளைகளை உதாசீனம் செய்து வந்தார்.

அதேபோன்று மகிந்தவின் முன்மொழிவுகளை சந்திரிகாவும் கருத்தில் எடுக்கவில்லை. இவ்வாறு ஜனாதிபதி -பிரதமர் இருவருக்குமிடையிலான உறவுப்பாலம் பலவீனமாகவே இருந்து வந்தது.

ஜனாதிபதியாக இருந்த சந்திரிகா குமாரதுங்காவின் அதிகார எல்லைகள் மகிந்த ராஜபக்ஷவுக்கு வெறுப்பையே அளித்தது. இதனால் 'ஜனாதிபதியின் ஆட்சியில் பிரதமர் பியோன்' என மகிந்த கூறிவந்தார்.

ஜனாதிபதியாக இருந்த சந்திரிகாவின் உத்தரவுகளை எதுவித அச்சமும் இன்றி மகிந்த ஏற்க மறுத்தமை பல சந்தர்ப்பங்களில் நடந்துள்ளது:

அவ்வாறு அவர் ஏற்க மறுத்ததி ல் மிகவும் முக்கியமானதாக பொதுக்கட்டமைப்பு உடன்படிக்கையை கூறிக்கொள்ளலாம்.

அதாவது பொதுக்கட்டமைப்பு உடன்படிக்கையை பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்க வேண்டிய பொறுப்பு பிரதமர் மகிந்தவிற்குரியதாக இருந்தது.எனினும் ஜே.வி.பி. மீது அவர் கொண்ட அளவு கடந்த பாசமும், பொதுக்கட்டமைப்பு மீது கொண்டிருந்த வெறுப்பும் காரணமாக பொதுக்கட்டமைப்பை பாராளுமன்றத்தில் வாசிப்பதற்கு பிரதமராக இருந்த மகிந்த மறுத்துவிட்டார்.

இது சந்திரிகா குமாரதுங்காவிற்கு பெரும் தலையிடியாகவும், கௌரவப்பிரச்சினையாகவும் இருந்தது.

எனினும் ஒருவாறாக பிரதமரின் பணியை இன்னோர் அமைச்சர் ஏற்றுக் கொண்டார். இவ்வாறு இருவருக்குமிடையிலான விரிசல்கள் அதிகரித்துச் சென்றாலும் கஷ்ர காலம் பண்டார நாயக்க குடும்பத்திற்கு என்பது போல மகிந்த ஜனாதிபதியாகி விட்டார்.

இப்போது பிரதமர் பதவி வெற்றிடமாகி உள்ளது. ஜனாதிபதியாக இருக்கத்தான் என்னால் முடியவில்லை, அதற்காக பிரதமராகவும் இருக்கவா? முடியாது என்று அநுரா பண்டார நாயக்க கேள்வி எழுப்பியுள்ளார்.

இந்த கேள்விகள் எல்லாம் அநுராவின் பக்கத்தில் இருந்து ஏற்படும் என்பதை ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ முன்கூட்டித்தெரிந்து வைத்திராமலும் இல்லை.

அநுராவை பிரதமராக்கினால் சிறிலங்கா சுதந்திரக்கட்சியின் தலைமைத்துவத்தை பண்டார நாயக்க குடும்பத்திலிருந்து மீட்டெடுக்கமுடியாது என்பது மகிந்தவிற்கு நன்கு தெரியும்.

ஆக,அநுராவுக்கு பிரதமர் பதவியை வழங்காது விடுவதன் மூலம் சிறிலங்கா சுதந்திரக்கட்சியில் இருந்து பண்டார நாயக்க குடும்பத்தை விலக்குவதே மகிந்தவின் இலக்கு.

# ஜனாதிபதியின் உரையில் நோர்வே புறக்கணிப்பு சந்தேகத்தை ஏற்படுத்தியுள்ளது இரா.சம்பந்தன்



(கொழும்பு)

ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவின் முதலாவது உரையில் சமாதான ஏற்பாட்டாளரான நோர்வேயைப் பற்றி குறிப் பிடப் படாமையானது சந்தேகத்தை ஏற்படுத்தியுள ளதாக தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு தெரிவித்துள்ளது.

நேற்று முன் தினம் மஹிந்த நாட்டு மக்களுக்கு நிகழ்த் திய உரைதொடர்பாக கருத்துரைத்த தமிழ்த்தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினரும் குழுத் தலைவருமான இரா.சம்பந்தன்,

ஜே.வி.பியுடன் மஹிந்த செய்து கொண்ட ஒப்பந்தத்திலும் அவருடைய பிரசாரத்தின் போதும் இந்த ஒப்பந்தங்களில் கூறப்பட்ட நிலைமைகளிலிருந்தும் அவர் மாறவில்லை. தற்போது அவர் ஜனாதிபதிப் பதவியை ஏற்றவுடன் 'தான் விடுதலைப புலிகளுடன் பேச்சுவார்த்தைக்கு தயார்' என்று கூறுகின்றார். இதைத்தான் முன்பும் தெரிவித்தார். ஆனால் அவருடைய உரையில் பேச்சுவார்த்தையில் உதவியாளராகக் கடமைபுரிந்த நோர்வேயைப் பற்றி எதுவும் குறிப்பிடப்படவில்லை. நோர்வேயின் பணி தொடருமென்று அவரால் அப் பேச்சில் கூறப்படவில்லை. எனவே அவர் நேற்று முன்தினம் ஆற்றிய உரையிலிருந்து மாத்திரம் எந்த முடிவிற்கும் வரமுடியாது. எனவே பேச்சிலும் பார்க்க முக்கியமாக செயல் வடிவத்தில் என்ன நடைமுறைகளை மஹிந்த பின்பற்றப்போகிறார் என்பது தங்கியுள்ளது என்று தெரிவித்துள்ளார். (று-9)

# முஸ்லிம்களின் அபிலாஷை தேர்தலின் மூலம் பிரகடனம்

-பஸீர் சேகுதாவூத்

(கொழும்பு)

வடக்கு-கிழக்கு மாகாண முஸ்லிம் பிரதேசங்களிலிருந்து பெறப்பட்ட ஜனாதிபதித் தேர்தல் முடிவி . பிரகாரம் முஸ்லிம்கள் தமக்குரிய நிலத் தொடர்ப , தனி அலகு கோரிக்கைக்கும்,சுயாட்சி அதிகாரத்திற்கும் ஆணை வழங்கியுள்ளதாக ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தவிசாளரும் பாராளுமன்ற உறுப்பினருமான பஸீா சேகுதாவூத் தெரிவித்துள்ளார். முஸ்லிம்களின் அரசியல் அபிலாஷைகள் அனைத்தையும் ஏற்றுக்கொண்ட ஜனாதிபதி வேட்பாளருக்கே முஸ்லிம் மக்கள் தமது அதிகப்படியான ஆதரவை வழங்கியுள்ளார்கள். இதன்மூலம் முஸ்லிம்களின அரசியல் அபிலாஷை, சுயாட்சி அலகுகள் என்பன தேசிய சக்திகளுக்கும் சர்வதேச சமூகத்திற்கும் பிரகடனம் செய்யப்பட்டுள்ளது.

அடுத்த கட்ட சமாதானப் பேச்சுவார்த்தைகளின் போது முஸ்லிம்களின் சுயாட்சிக் கோரிக்கை தொடர்பாக பிரஸ்தாபிக்காமல் பேச்சுவார்த்தைகளை ஆரம்பித்து முன்கொண்டு செல்லமுடியாது என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

புதிய ஜனாதிபதியாகத் தெரிவு செய்யப்பட்டுள்ள மஹிந்த ராஜபக்ஷ எவ்வாறு இந்த நாட்டை ஆளப்போகின்றார் என்பதை இன்னும் ஒரு சில மாதங்களில் தெரியவரும்.

மஹிந்த ராஜபக்ஷ ஜனாதிபதியாக வருவதற்கு ஜே.வி. பியினரையும்,ஜாதிக ஹெல உறுமயவையும் பயன்படுத்திக் கொண்டாலும் அவர்களைத் தொடர்ந்தும் வைத்துக்கொண்டு ஆட்சிசெய்ய முடியாது என்றும் பஸா சேகுதாவூத் சுட்டிக்காட்டியுள்ளார். முஸ்லிம்கள் வாக்களித்த வேட்பாளர் தேசிய ரீதியில் தோல்வியை சந்தித்திருந்தாலும் முஸ்லிம்களின் கோரிககைகளும் அவர்களது அரசியல் சக்திகளும் வெற்றி பெற்றுள்ளன. இதன் மூலம் முஸ்லிம் காங்கிரஸை விட்டுவெளியேறிய ஆனைவரும் படுமோசமாகத் தோற்கடிக்கப்பட்டுள்ளதாகவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார். (று-9)

# சிறு வர்த்தகர்களுக்கு கடனுதவி

(கொழும்பு)

ஆழிப்பேரலை அனர்த்தத்தில் பாதிக்கப்பட்ட சிறுவர்த்தகர்களுக்கு நிவாரணம் வழங்கத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

இலங்கை மத்திய வங்கியின் ஊடாக ஐக்கிய நாடுகள் அபிவிருத்தித் திட்டத்தின் நிதி உதவியின் கீழ் சிறுவர்த்தகர்களுக்கு கடனுதவி வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

இதற்கென ஐக்கிய நாடுகளின் அபிவிருத்தித் திட்டம் 10 இலட்சம் அமெரிக்க டொலர்களை மத்திய வங்கிக்கு வழங்கியுள்ளது.

குறைந்த நிபந்தனைகளின் அடிப்படையில் ஆழிப்பேரலையால் பாதிக்கப்பட்ட சிறு வியாபாரிகளுக்கு அவர்களின் பிரதேசங்களில் இருக்கும் வங்கிகளின் ஊடாக இந்தக் கடன உதவிகளை வழங்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.(று-7)

# வேறுபாடுகளை மறந்து சகலரும் ஒன்றிணைய வேண்டும்

-ஓமல்பே சோபித தேரர்

(கொழும்பு)

ஜனாதிபதித் தேர்தலுக்குப் பின்னர் சகலரும் வேறுபாடுகளை மறந்து ஒற்றுமையாக செயற்படவேண்டியதன் அவசியத்தை ஜாதிக ஹெல உறுமய வலியுறுத்தியுள்ளது.

ஜாதிக ஹெல உறுமயவின் பொதுச் செயலாளரும் பாராளுமன்ற உறுப்பினருமான ஓமல்பே சோபித தேரர் விடுத்துள்ள அறிக்கையில்,

ஜனாதிபதித் தேர்தலில் பிரதமர் முன்வைத்த கொள்கைகளை நாட்டின் சகல சமூகத்தவர்களும் ஏற்றுக்கொண்டிருக்கிறார்கள்.

இந்த வெற்றி ஐக்கிய இலங்கைக்கு மக்கள் அளித்த ஆணையாகும். தொண்டமான்,சந்திரசேகரன்,ஹக்கீம் போன்றவர்களின் ஆதரவோடு தேர்தல்களை வெற்றிகொள்ள முடியும் என்ற நிலைப்பாடு சிதறடிக்கப்பட்டுள்ளது என்று குறிப்பிடப்பட்டுள்ளது. (று-7)

# மஹிந்தவுக்கான வாக்களிப்பு யுத்தத்திற்கான வாக்களிப்பு

-திஸ்ஸ அத்தநாயக்க

(கொழும்பு)

ஜனாதிபதித் தேர்தலில் மஹிந்த ராஜபக்ஷவுக்கு மக்கள் வாக்களித்துள்ளதன் மூலம் யுத்தத்துக்கு வாக்களித்துள்ளனர் என்று ஐக்கிய தேசியக் கட்சி யின் பிரதிச் செயலாளர் திஸ்ஸ அத்தநாயக்க தெரி வித்துள்ளார்.

கடந்த 2002ஆம் ஆண்டு ஐக்கிய தேசியக் கட்சி ஏற்படுத்திய யுத்தநிறுத்த ஒப்பந்தம் மூலம் இந்த நாடு வெடி குண்டுகளிலிருந்தும் வீதித் தடைகளிலிருந்தும் விடுவிக்கப்பட்டது. மக்கள் அச்சமின்றி வாழும் சூழல் உருவாக்கப்பட்டது.

தென்னிலங்கை மக்களும் விடுதலைப் புலிகளின் பிரதேச மக்களும் கடந்த 20 ஆண்டுகாலமாக இங்கே ஒரு யுத்தம் நடந் தது என்பதை மறந்திருந்தனர்.யுத்த நிறுத்த ஒப்பந்தத்தில் திருத்தங்கள் மேற்கொள்ளப்படும் என்று ஜே.வி.பி, ஜாதிக ஹெல உறுமயவினருக்கு மஹிந்த ராஜ பக்ஷ உறுதியளித்துள்ளார். யுத்த நிறுத்த ஒப்பந்தம் திருத்தப்பட்டால் போரைத் தொடங்குவோம் என்று விடுதலைப் புலிகள் எச்சரித்துளளனர் எனவும் திஸ்ஸ அத்தநாயக்க மேலும் தெரிவித்துள்ளா. (று-4)

# இலங்கை மாணவர்களுக்கு இந்தியாவில் பட்டப்படிப்பு

புலமைப்பரிசில் வழங்க இந்திய அரசு முன்வருகை

2006/2007ஆம் கல்வியாண்டிற்கான இந்தியப் பல்கலைக் கழகங்களில் பட்டப் படிப்புக்களை மேற்கொள்வதற்கு இலங்கை மாணவர்களுக்கு புலமைப்பரிசில் வழங்குவதற்கு இந்திய அரசாங்கம் முன்வந்துள்ளது.

இதறகான விண்ணப்பங்களை எதிர்வரும் 25ஆம் திகதிக்கு முன்னர் அனுப்பிவைக்க வேண்டும் என இந்தியத் தூதரகம் தெரிவித்துள்ளது.

விண்ணப்பப் படிவங்களை கல்விப்பிரிவு, இந்தியத் தூதரகம், கொழும்பு-03 அல்லது கல்வி மற்றும் உயர் கல்வியமைச்சு, 18 ஹோட்பிளேஸ், கொழும்பு-07 ஆகிய முகவரிகளில் ஏதேனும் ஒன்றிற்கு அனுப்பிவைக்குமாறு இந்தியத் தூதரகம் கேட்டுள்ளது. இத்தத் திட்டத்தின் பிரகாரம் அடுத்த கல்வியாண்டில் 40 மாணவர்களுக்கு இந்தியப் பல்கலைக்கழகங்களில் கல்வியை மேற்கொள்வதற்கு புலமைப்பரிசில் வழங்கப்படவுள்ளது.

இதேவேளை, விண்ணப்பதாரிகள் www.moe. gov. lk எனும் இணையத்தளத்தினூடாகவும் தமது விண்ணப்பங்களைச் சமர்ப்பிக்கலாம் என இந்தியத் தூதரகம் தெரிவித்துள்ளது.(று-7)

# சிறைச்சாலைகளின் பாதுகாப்பை பலப்படுத்த நடவடிக்கை

(கொழும்பு)

நாட்டின் சிறைச்சாலைகளின் பாதுகாப்பைப் பலப்படுத்துவதற்கான திட்டம் ஒன்று அமுல்செய்யப்படவுள்ளது.

இதற்கமைய சிறைச்சாலைத் திணைக்களம் புதிதாக சிறைச்சாலை உத்தியோகத்தர்களை சேவைக்கு சேர்த்துக் கொள்ளவுள்ளது.இதற்கான அனுமதியை நீதி அமைச்சர் ஜோன் செனவிரத்ன ஏற்கனவே வழங்கியுள்ளார்.

சிறைச்சாலைகள் ஆணையாளர் நாயகம் தெரிவித்த தகவலில், நாடு முழுவதிலும் உள்ள சிறைச்சாலைகளில் சிறைச்சாலை உத்தியோகத்தர்களுக்கு இருக்கும் வெற்றிட விபரங்களை தாம் ஏற்கனவே பெற்றுள்ளதாகக் கூறினார்.

சிறைக் கைதிகளின் எண்ணிக்கைகளுக்கு அமைய சிறைச்சாலை உத்தியோகத்தர்களின் எண்ணிக்கையும் அதிக்ரிக்கப்படவேண்டும் என்று அவர் தெரிவித்துள்ளார்.(அ-7)

## தினசரி தியானம் விவேகச் சிந்தனைகள்



'நான்'என்னும் அகந்தை உணர்வு சிறிதும் இல்லாமல் நாம் செய்யும் செயல்கள் சிறந்தனவாக அமைகின்றன. அதில் தான் நமக்கு உள்ள திறமை அபரிமிதமாகப் பயன்படுகிறது. நான் என்பதை ஒழித்து விடு. இழந்துவிடு. மறந்துவிடு. இறைவன் அவனுடைய செயல்களைச் செய்துகொள்ளட்டும். இது அவனுடைய கடமை. ஒதுங்கி இருப்பதைத் தவிர வேறு வேலை எதுவும் நமக்கு இல்லை. இறைவனது செயல நிகழட்டும்.

சுவாமி விவேகானந்தர்

# தளபதிகளின் ஓய்வு வயதை உயர்த்தும் முயற்சி ரத்து

(கொழும்பு)

முப்படைகளிலும் இராணுவ தளபதிகளின் ஓய்வு வயதை உயர்த்த முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க அறிவித்திருந்த உத்தரவை ரத்து செய்வதற்கு புதிய ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ முடிபு செய்துள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

ஜனாதிபதி தேர்தலுக்கு மூன்று வாரங்களுக்கு முன்பாக சந்திரிகா குமாரதுங்க இது தொடர்பாக உத்தரவைப் பிறப்பித்திருந்தார். இந்த உத்தரவானது நீதியற்றது, பாரபட்சமானது என்று கொழும்பு ஊடகம் ஒன்றிற்கு மகிந்த ராஜபக்ஷ கருத்து தெரிவித்துள்ளார்.

எனது முதன்மையான பரிசீலனைகளில் இந்த விடயமும் இருக்கும் என்றும் மகிந்த ராஜபக்ஷ கூறியுள்ளதாக செய்திகள் தெரிவிக்கின்றன. (ச)

# கடற்படை-பொது மக்களிடையே நெடுந்தீவில் நேற்றிரவு முறுகல்

(நெடுந்தீவு)

நெடுந்தீவில் மாவீரர்தின வளைவுகள் கட்டியவர்கள் மீது கடற்படையினர் தாக்குதல் மேற்கொண்டதாக அங்கிருந்து கிடைக்கும் செய்திகள் தெரிவிக்கின்றன.

நேற்று மாலை நெடுந்தீவு துறைமுகப் பகுதியில் அலங்கார வேலைகளில் ஈடுபட்டிருந்தவர்கள் மீதே இத்தாக்குதல் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

இதனையடுத்து பொது மக்களுக்கும் கடற்படையினருக்கும் இடையில் முறுகல் நிலை ஏற்பட்டது. இதன் போது நால்வர் கைது செய்யப்பட்டதாகவும் கூறப்பட்டது.

இச்சம்பவத்தினையடுத்து பெருமளவான கடற்படையினர் இரவிரவாக நெடுந்தீவில் குவிக்கப்பட்ட னர். இதேவேளை நேற்றிரவு நெடுந்தீவில் சில பகுதிகள் சுற்றிவளைக்கப்பட்டு கடற்படையினரால் தேடுதல் மேற்கொள்ளப்பட்டது. (ச-8)

# வட. கிழக்கில் மறுதேர்தல் நடத்தக்கோரி வழக்குத் தொடர ஐ.தே.கட்சி தீர்மானம்

(கொழும்பு)

வடக்கு - கிழக்கில் மீண்டும் ஜனாதிபதித் தேர்தலை நடத்தக்கோரி வழக்குத்தாக்கல் செய்வது குறித்து ஐக்கிய தேசியக்கட்சி தீர்மானித்துள்ளது. இது குறித்து இன்று முடிவெடுக்கப்படவுள்ளது. வடக்கு - கிழக்கில் நீதியானதும் நியாயமானதுமான தேர்தலை நடத்த தேர்தல் ஆணையாளர் தயானந்த திஸநாயக்க தவறிவிட்டார்.

வாக்குப் பதிவுகள் பாதிக்கப்பட்ட பிரதேசங்கள், அரச சொத்துக்கள் மற்றும் ஊடகங்கள் முறைகேடுகள் ஆகிய வற்றைச் சுட்டிக்காட்டி வடக்கு-கிழக்கில் நாம் மறு தேர்தலை நடத்த வலியுறுத்தியிருந்தோம்.

வாக்காளர்கள் வாக்களிப்பதை தடுத்தமைக்கான உரிய ஆதாரங்கள் இருந்தும் நாட்டின் எந்தப் பகுதியிலும் மறு தேர்தலை தேர்தல் ஆணையாளர் நடத்த வில்லையென ஐ.தே.கவின் பிரதிச்செயலாளர் திஸ்ஸஅத்தநாயக்க தெரிவித்துள்ளார்.

மகிந்த ராஜபக்ஷ உத்தியோக பூர்வமாக தெரிவு செய்யப்பட்டதாக தேர்தல் ஆணையாளர் அறிவிக்கும் முன்பாகவே மறு தேர்தலை நடத்த வலியுறுத்தி முறைப்பாட்டு மனுவையும் கையளித்ததாக அவர் தெரிவித்தா ர்.

நாட்டின் மிக முக்கியமான தேர்தல் பணிப்பாளர்களான பவ்ரல் அமைப்பினரும் வடக்கு- கிழக்கில் மக்கள் வாக்களிக்கப்பட்டது தடுக்கப்பட்டதாக தெரிவித்துள்ளனர்.

எனவே வடக்கு கிழக்கில் மறு தேர்தலை நடத்த வலியுறுத்தும் சட்ட பூர்வமான நடவடிக்கையை மேற்கொள்வது தொடர்பாக நாம் இன்று முடிவெடுக்கவுள்ளதாக திஸ்ஸ அத்தநாயக்க தெரிவித்துள்ளார். (ச-8-9)

# ஐ.தே.கவின் தவிசாளர் சமரவிக்கிரம விலகல்

(கொழும்பு)

ஐக்கிய தேசியக்கட்சியின் தவிசாளர் மலிக் சமரவிக்கிரமசிங்க தனது பதவியில் இருந்து விலகுவதாக அறிவித்துள்ளார்.

ஜனாதிபதித் தேர்தலில் இருந்து ஐக்கிய தேசியக் கட்சி தோல்வி அடைந்துள்ள நிலையில் தான் விலகுவதாக அவர் தெரிவித்துள்ளார். தேர்தல் தோல்விக்காக ஐக்கிய தேசியக் கட்சியின் தலைமைப் பதவியில் இருந்து ரணில் விக்கிரமசிங்கவை விலக்கவேண்டிய தேவையில்லை எனவும் அவர் கூறினார். (ச)

# வீடியோ சென்ரர் தீக்கிரையானது

(வட்டுக்கோட்டை)

வட்டுக்கோட்டை மாவடிச்சந்தியில் உள்ள ஈசன் வீடியோ சென்ரர் நேற்று இரவு 7 மணியளவில் தீக்கிரையானது.

மின் தடை காரணமாக மெழுகு வர்த் தியை ஏற்றியதாகவும் மெழுகுவர்த்தி தவறி விழுந்ததால் இத் தீவிபத்து ஏற்பட்டதாகவும் தெரிவிக்கப்படுகின்றது. (ந-39)

# புலிகளிடமுள்ள பொலிஸாரை விடுவிக்க ஜனாதிபதியிடம் முறையிடத் தீர்மானம்

(கொழும்பு)

தமிழீழ விடுதலைப்புலிகளினால் கைது செய்யப்பட்டு தடுப்புக்காவலில் வைக்கப்பட்டுள்ள 3 பொலிஸாரையும் விடுதலை செய்யும் பொருட்டு புதிய ஜனாதிபதியுடன் பேச்சு வார்த்தைகளில் ஈடுபடவுள்ளதாக தேசிய சிறுவர் பாதுகாப்பு சபையின் தலைவர் சிரந்தி விஜயமான தெரிவித்துள்ளார். இது குறித்து நடவடிக்கைகளை மேற்கொள்ள விருப்ப தாகவும் அவர் கூறினார்.

கடந்த3மாதங்களுக்கு முன்னர் சிறுவர் துஷ்பிரயோகம் ஒன்றுடன் தொடர்புடைய வெளிநாட்டவர் ஒருவரை கைது செய்யும் பொருட்டு புலிகளின் கட்டுப்பாட்டுப் பகுதிக்குள் சென்ற பொலிஸ் அதிகாரிகள் மூவர் விடுதலைப்புலிகளினால் கைது செய்யப்பட்டனர். இந்த 3 பொலிஸ் அதிகாரிகளையும் விடுவிக்கும் பொருட்டு பல்வேறு பகுதியினருடனும் பேச்சு வார்த்தை நடத்தப்பட்டது. ஆனால் புலிகளுடன் நேரடியாக பேசும் வாய்ப்பு கிடைக்க வில்லை என்றும் அவர் மேலும் தெரிவித்தார்.

இந்நிலையில் அவர்களின் விடுதலை குறித்து புதிய ஜனாதிபதியிடம் முறையிடவுள்ளதாகவும் அவர் தெரிவித்தார். (ச-8)

# அநுராவின் அமைச்சு பறிக்கப்படுமாம்?

(கொழும்பு)

வெளிவிவகார. அமைச்சர் அநுரா பண்டாரநாயக்காவின் அமைச்சுப் பொறுப்பு பறிக்கப்படும் என்று அமைச்சர் ஜெயராஜ் பொர்ணான்டோ புள்ளே தெரிவித்துள்ளார்.

அலரிமாளிகையில் மகிந்த ராஜபக்ஷ நடத்திய முக்கிய கூட்டம் ஒன்றில் அநுரா பங்கேற்கவில்லை.

இது தொடர்பில் கருத்து வெளியிட்ட ஜெயராஜ் பெர்ணான்டோபுள்ளே மகிந்தவின் ஜனாதிபதி பொறுப்பில் அநுரா தனது தற்போதைய நிலையை இழந்துவிடுவார் என்றும் அவர் உள்விவகாரங்களுக்கான அமைச்சராக நியமிக்கப்படக் கூடும் என்றும் தெரிவித்துள்ளார்.

நாட்டின் முக்கியமான காலகட்டத்தில் தீவிரமாக செயற்படக்கூடிய லக்ஸ்மன் கதிர்காமர் போன்றவர்கள் தான் வெளிவிவகார அமைச்சுப் பொறுப்பு வகிக்க வேண்டும் என்றும் ஜெயராஜ் பெர்ணான்டோ புள்ளே கருத்து தெரிவித்துள்ளார். (ச-8)

# விபத்தில் மூவர் காயம்

(சாவகச்சேரி)

சாவகச்சேரி கச்சாய் வீதியில் நேற்று இடம் பெற்ற மோட்டார் சைக்கிள் விபத்தில் மூவர் காயமடைந்துள்ளனர்.

நேற்று மாலை 6 மணியளவில் இரண்டு மோட்டார் சைக்கிள்கள் நேருக்கு நேர் மோதியதாலேயே இவ்விபத்து நேர்ந்துள்ளது. இதில் படுகாயமடைந்த ஜெயக்குமார் திலீபன் (வயது-20) என்பவர் சாவகச்சேரி வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு மேலதிக சிகிச்சைக்காக யாழ்.போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார். (ச-108)

# புலிகளின் குரல் வானோசை- 15 வெற்றி பெற்றவர்களுக்கு பரிசு

(கிளிநொச்சி)

புலிகளின் குரல் வானோசை-15 கலை, இலக்கியப் போட்டியில் வெற்றி பெற்றவர்களுக்கு தமிழீழ தேசியத் தலைவர் பிரபாவின் சான்றிதழ்கள் வழங்கி மதிப்பளிக்கப்பட்டுள்ளது.

வானோசை-15 விழா நேற்று புலிகளின் குரல் அமலன் அரங்கில் நடைபெற்றது. பிற்பகல் 4 மணிக்கு தொடங்கிய நிகழ்வில் பொதுச் சுடரினை தமிழீழ அரசியல்துறைப் பொறுப்பாளர் சு.ப. தமிழ்ச்செல்வன் ஏற்றினார்.

தமிழீழ அரசியல் துணைப்பொறுப்பாளர் சோ.தங்கன் ஈகச் சுடரை ஏற்றினார். பொது மாவீரர் நினைவுக் கல்லறைக்கு சோதியா படையணி சிறப்புத்தளபதி கேணல் துர்க்கா மலர்மாலை அணிவித்தார்.

புலிகளின் குரல் பொறுப்பாளர் நா.தமிழன்பன் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில் வரவேற்புரையை புலிகளின் குரலின் மூத்த ஒலிப்பதிவாளர் விஜயமலர் நிகழ்த்தினார். வானோசை-15 கலை, இலக்கிய போட்டிகளில் வெற்றி பெற்றவர் களுக்கு தமிழீழ தேசியத் தலைவர் வே.பிரபாகரன் கையெழுத்திட்டு வழங்கிய சான்றிதழ்களை தமிழீழ அரசியில்துறைப் பெறுப்பாளர் சு.ப. தமிழ்ச்செல்வன், தமிழீழ கல்விக் கழக பெறுப்பாளர் வெ. இள ங்குமரன், தமிழீழ காவல் துறைப் பொறுப்பாளர் பா.நடேசன், சோதியா படையணி சிறப்புத்தளபதி கேணல் துர்க்கா, மாவீரர் பணிமனைப் பொறுப்பாளர் பொன் தியாகம், மகளிர் அரசியல் துறைப்பொறுப்பாளர் தமிழினி ஆகி யோர் வழங்கினா. (ச-

# கிழக்கில்...

சட்டத்தரணி ஏ.சிவபாலன் ஆகியோர் வெள்ளம் ஏற்படக்கூடிய இடங்களை சென்று பார்வையிட்டுள்ளனர். இதே போல் மட்டக்களப்பு மாவட்டத்திலும் கடும் மழை பெய்து வருவதாகவும் வெள்ளப் பெருக்கு ஏற்படும் அபாயம் ஏற்பட்டுள்ளது.

இதனால் மக்கள் தமது இருப்பிடங்களை விட்டு வெளியேறி மேட்டு நிலப்பகுதிகளை நோக்கி இடம் பெயர்ந்து வருவதாகவும் தெரிவிக்கப்பட்டது. (ச-8)

# புதிய பிரதமராக...

புதிய பிரமராக டி.எம்.ஜெயரட்ணவை நியமிப்பதற்கு கட்சியின் அனைத்து மத்திய குழு உறுப்பினர்களும் இணங்கியுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

புதிய பிரதமரின் பதவியேற்பு வைபவம் இடம் பெற்றதைத் தொடர்ந்து புதிய அமைச்சரவையும் அறிவிக்கப்படவுள்ளது. இதில் ஜே.வி.பியின் பாராளுமன்ற உறுப்பினர் பலருக்கு அமைச்சுப் பொறுப்பு வழங்க ஜனாதிபதி தீர்மானித்துள்ளதாக கட்சி வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

இதே வேளை பிரதமர் பதவியை எதிர் பார்த்திருந்த அநுரா பண்டாரநாயக்காவை புறக்கணித்து விட்டு டி.எம்.ஜெயரட்ணவுக்கு பிரதமர் பதவியை வழங்கவுள்ளமையால் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ மீது பண்டாரநாயக்கா குடும்பம் ஆத் திரம் அடைந்துள்ளதாக கூறப்படுகின்றது.

அநுரா பண்டார நாயக்காவை வெளிவிவகார அமைச்சர் பதவியில் இருந்து தூக்கவும் ஜனாதிபதி திட்டமிட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

இது இவ்வாறிருக்க, புதிய ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவிற்கான பொறுப்புக்களையும் கடமைகளையும் முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க நாளை மறுதினம் உத்தியேகபூர்வமாக கையளிக்கின்றார்.


இது தொடர்பாக விசேட நிகழ்வுகளும் இடம் பெறவுள்ளன. அன்றைய தினம் ஜனாதிபதி மாளிகையும் புதிய ஜனாதிபதியிடம் கையளிக்கப்படவுள்ளது. இது தொடர்பான சகல நடவடிக்கைகளையும் முன்னாள் ஜனாதிபதி மேற்கொண்டுள்ளதாக ஜனாதிபதி செயலக வட்டாரங்கள் தெரிவித்துள்ளன. (ச-8)

ராஜேஸ்வரி ... யாழ்ப்பாணம்
இந்தியாவிலும் யாழ்ப்பாணம்
இலங்கையிலும் ஒரேதின வெளியீடு
தனுஷ், பிரியாமணி மற்றும் பலர் நடித்த
பாலுமகேந்திராவின் கதை, வசனத்தில்
இளையராஜா வின் இசையில்
அது ஒரு கனாக்காலம்
கா.நே: 10.30, 2.30, 6.30, 9.30 (பு.நே)

ரூபா 5
ஐந்து ரூபாவுக்கு
என்ன வாங்கலாம்
விரைவில்..........
(9979)

மனோகரா யாழ்.
யாழ். நகரில் முதன்முறையாக DIGITAL dts SOUND ஒலிநயத்துடன்


விஜய் + அசின்
கா.நேரம் 10.30, 2.30 6.30, 9.30(பு.நே)
சில தினங்கள் மட்டும் மாலை 8.30 காட்சி காண்பிக்கப்படும்

நிறைஞ்சனாஸ்
சங்கானை
சிவாஜி, ரஜனி, ஜெய்சங்கர், அம்பிகா நடிக்க

பழக்காதவன்
கா.நே: 11.00, 2.45, 6.00 (பு.நே)

இப்பத்திரிகை வலம்புரி அன்.கோ ஸ்தாபனத்தாரால் இல.3 இரண்டாம் ஒழுங்கை பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 21.11.2005 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.